அத்தியாயம் 3

# மத்திய வங்கியின் கொள்கைகள் பற்றிய மீளாய்வு


## சுருக்கம்

2024இன் மத்திய வங்கிக் கொள்கைகள் விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்தியதுடன் அதனூடாக உயர்வான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான சூழலை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது. குறைவடைந்த கேள்வி மற்றும் நிரம்பல் பக்க அழுத்தங்கள், மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றிற்கு மத்தியில், மத்திய வங்கியானது 2024இல் மூன்று கொள்கை வீதக் குறைப்புகளுடன் அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் தளர்த்தியது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் நாணய நிலைமைகளுக்கிசைவாக, 2024இல் சந்தை வட்டி வீதங்கள் மேலும் கீழ்நோக்கி சீராக்கப்பட்டு, தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் நியாயமான குறைந்த வீதங்களில் கடன் பெறுகைகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் விரைவான தனியார் துறை கொடுகடன் விரிவடைதலுக்கும் பொருளாதார மீட்சிக்கும் உதவியளித்தன. ஆண்டுகாலப்பகுதியில் பணவீக்கம் குறைவடைந்து காணப்பட்டதுடன் வலு விலைகளின் மீண்டும் மீண்டுமான குறைப்பின் காரணமாக, 2024 செத்தெம்பர் தொடக்கம் பணச்சுருக்க நிலைமைகளுக்கு மாறுதலடைந்தது. இதற்கமைய, காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையில் கீழ் எல்லையிலிருந்து எடுத்துரைக்கப்பட்ட பணவீக்க இலக்கிடலின் 2024இல் இறுதி மூன்று காலாண்டுகளில் விலகிய பணவீக்க விலகல், எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகளை விளக்கி கௌரவ நிதியமைச்சரினூடாக பாராளுமன்றத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்குத் தூண்டி, பாராளுமன்றத்திற்கும் மற்றும் பொதுமக்களுக்குமான மத்திய வங்கியின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தது. எவ்வாறிருப்பினும், 2025இன் பிற்பகுதியில் பணவீக்கம் இலக்கிடப்பட்ட மட்டத்தை நோக்கிச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. விலைகளில் ஏற்படும் விடாப்பிடியான வீழ்ச்சி பொருளாதார நடவடிக்கைகளை ஊக்கமிழக்கச் செய்வதால், நீண்ட காலத்திற்கு குறைந்த மற்றும் நிலையான மட்டத்தில் பணவீக்கம் இருப்பது வியாபாரங்கள் மற்றும் வீட்டுத்துறை இரண்டிற்கும் நன்மை பயக்கும். 2024 நவெம்பரில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பில் முக்கிய மைல்கலொன்றினைப் பதிவுசெய்து, நாணயக் கொள்கை சமிக்ஞைப்படுத்தலை வலுப்படுத்தல் மற்றும் நாணயக் கொள்கை ஊடுகடத்தலை அதிகரித்தல் போன்ற குறிக்கோளுடன் இரட்டைக் கொள்கை வீத பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வீத பொறிமுறைக்கு மாறியது. நாணயக் கொள்கை தொடர்பில் மத்திய வங்கியின் வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்துவதற்கு 2024ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் மத்திய வங்கி இரு நாணயக் கொள்கை அறிக்கைகளையும் ஒரு சந்தை தொழிற்பாட்டு அறிக்கையையும் வெளியிட்டது. அதேவேளை, மத்திய வங்கி, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. மத்திய வங்கி மூலமான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தலையீடுகள் மிதமிஞ்சிய செலாவணி வீத தளம்பல்களைக் குறைப்பதற்கும் நாட்டின் வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை அதிகரிப்பதற்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் ஒப்பீட்டளவில் உறுதியான வெளிநாட்டுத் துறை என்பவற்றை கருத்திற்கொண்டு, நெருக்கடி முகாமைத்துவ உபாயத்தின் பாகமாக 2020-2022 காலப்பகுதியில் மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள்

மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள் போன்ற வெளிநாட்டுத் துறையுடன் தொடர்புடைய நிர்வாக ரீதியான வழிமுறைகள் 2024 காலப்பகுதியில் மேலும் கட்டம் கட்டமாக தளர்த்தப்பட்டன. நிதியியல் துறை நோக்கில், 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம், 2024 ஏப்பிறலில் சட்டமாக்கப்பட்டு உரிமம்பெற்ற வங்கிகளின் ஆளுகைக்கான சட்ட ரீதியான கட்டமைப்பை மீள வலிமைப்படுத்தியது. இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகை தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கும் மத்திய வங்கி பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையை எதிர்பார்த்து, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒன்றுதிரட்டலுக்கான முதன்மைத் திட்டம் கட்டம் II 2024 திசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளை, நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு உயிரோட்டத்தை வழங்குவதற்காகவும் பொருளாதார புத்துயிரளித்தலை வலுப்படுத்துவதற்கும் வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளைத் தாபிப்பதற்கு மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்களை வழங்கியது. நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகார நிறுவனம் என்ற வகையில் மத்திய வங்கியானது கொள்கை உருவாக்கச் செயன்முறைகள் பற்றி ஆர்வலர் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கட்டமைப்பினை வெளியிட்டது. உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தீர்மானத் திட்டங்களையும் கட்டமைப்பையும் வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி 2024ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டது. சமூகத்தின் அனைத்து வகுப்பினர்களினதும் நிதியியல் அறிவையும் இயலுமையையும் பேணிவளர்க்கும் நோக்குடன் இலங்கைக்கான நிதியியல் அறிவு வழிகாட்டல் 2024 மேயில் மத்திய வங்கியினால் தொடங்கப்பட்டது. மேலும், டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதற்கும் அத்தகைய கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் மத்திய வங்கி எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டதுடன் அதன்மூலம் உற்பத்தித்திறன் மேம்பாடுகளுக்காக பொருளாதாரத்தில் டிஜிட்டல் உத்வேகத்திற்கு பங்களிப்பு செய்தது. இதற்கு மேலதிகமாக, நாட்டில் நிதியியல் பணிகளின் வெளிப்படைத்தன்மை, நியாயமான தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை நிலைநாட்டுவதற்கான கட்டமைப்பை உறுதிப்படுத்தி, மத்திய வங்கி 2024 ஓகத்து அளவில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை முழுமையாக அமுல்படுத்தியது. 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம், சட்டமாக்கப்பட்டதுடன் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பொதுப்படுடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் நிதி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட புதிய பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு படிப்படியாக குறித்தொதுக்கப்படுகின்றன. நிதியியல் துறையில் தார்மீக கடப்பாடு மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையை மேம்படுத்துவதற்காக பன்னாட்டு பணத்தூயதாக்கல் மற்றும் நிதிப் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல் நியமங்களுக்கமைவாக நிதியியல் உளவறிதல் பிரிவானது தொடர்ந்தும் பங்காற்றியது.

## 3.1 நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

**2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலையும் பேணுதலையும் எடுத்துரைப்பதுடன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலைக் குறித்துரைக்கின்றது.** இக்குறிக்கோளை அடையும்பொருட்டு, மத்திய வங்கிச் சட்டமானது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கிசைவாக நாணயக் கொள்கையை வகுப்பதற்கும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்குக்குப் பொறுப்பாணையளிக்கின்றது. மத்திய வங்கி அடைவதற்கு வேண்டப்பட்டுள்ள பணவீக்க இலக்கு, நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையில் வெளியிடப்பட்டவாறு மத்திய வங்கிக்கும் நிதியமைச்சருக்கும் இடையில் இணங்கிக்கொள்ளப்பட்டுள்ளது. நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் 5 சதவீதம் கொண்ட இலக்கில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை பேணுவதற்கு மத்திய வங்கி வேண்டப்பட்டுள்ளது. பணவீக்க இலக்கினை அடைவதற்கு மத்திய வங்கியானது விரும்பிய பாதையுடன் ஒன்றுசேர்த்து குறுகிய கால சந்தை வட்டி வீதங்களை வழிநடத்துவதற்கு அதன் கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது.

**நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினுள் நிறைவேற்றப்பட்ட முன்னேற்றங்களின் பகுதியாக மத்திய வங்கி 2024 நவெம்பரில்[1] அதன் இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கு மாறுதலடைந்தது.** இதற்கமைய, நிதியியல் சந்தைகளுக்கும் பரந்த பொருளாதாரத்திற்கும் நாணயக் கொள்கை சமிக்ஞைப்படுத்தலினதும் ஊடுகடத்தலினதும் வினைத்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கு மத்திய வங்கியின் முதன்மை நாணயக் கொள்கைக் கருவியாக ஓரிரவு கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் புதிய ஏற்பாட்டின் கீழும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காக தொடர்ந்தும் செயற்படுகின்றது. ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கு மாறியதுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதத்தை அறிவிக்கப்பட்ட ஓரிரவுக் கொள்கை வீதத்தில் அல்லது அதற்கு அண்மித்துப் பேணுவதற்கு மத்திய வங்கி முனைகின்றது. இம்மாறுதலுடன் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாகச் செயற்படுவது நிறுத்தப்பட்டது. எனினும், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதிகளுக்கு ஏற்புடைய வட்டி வீதங்களாக அவை தொடர்ந்தும் காணப்பட்டு, அதனூடாக வங்கிகளுக்கிடையேயான அழைப்பு பண வீதங்களுக்கான தாழ்வான அத்துடன் உயர்வான எல்லைகளாகத் தொழிற்படுகின்றன. அதேவேளை துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன தற்போது ±50 அடிப்படைப் புள்ளிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட எல்லையுடன் ஓரிரவுக் கொள்கை வீதத்திற்கு இணைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, 2024 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதக் குறைப்புடன் ஓரிரவுக் கொள்கை வீதம் 8.00 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டதுடன் பணச் சந்தைத் தொழிற்பாடுகள் மேற்குறித்த மாறுதலுக்கு வசதியளிக்கும் விதத்தில் ஏற்றவாறு ஆக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் ஓரிரவுக் கொள்கை வீதத்துடன் படிப்படியாக அணிசேரத் தொடங்கி ஆண்டின் எஞ்சியிருந்த காலப்பகுதியில் ஓரிரவுக் கொள்கை வீதத்தில் அல்லது அதற்கு அண்மித்துக் காணப்பட்டது.

**மத்திய வங்கிச் சட்டமானது அதன் பொறுப்பாணையை செயல்திறன்வாய்ந்த விதத்தில் முன்னெடுப்பதற்கு மேம்பட்ட தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் சுயாதீனத்தை வசதிப்படுத்துகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் மூலமான அதிகரித்த அளவிலான வெளிப்படைத்தன்மையையும் பகிரங்க பொறுப்புக்கூறலையும் வேண்டுகின்றது.** விலை உறுதிப்பாட்டைப் பரிசீலனையில் கொண்டு, பணவீக்க இலக்கை[2] அடைவதற்கு மத்திய வங்கி தவறுமாயின் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையை மத்திய வங்கிச் சட்டம் தேவைப்படுத்துகின்றது. இவ்வறிக்கை, பொதுமக்களுக்காகவும் கிடைக்கப்பெறச்செய்யப்படுதல் வேண்டும். பணவீக்க இலக்கினை அடைவதற்குத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் எடுக்கப்படவுள்ள முன்மொழியப்பட்ட பரிகார நடவடிக்கைகள் மற்றும் பணவீக்க இலக்கு அடையப்படவேண்டியதாகவுள்ள காலப்பகுதியின் மதிப்பீடு என்பவற்றை அறிக்கை குறித்துரைக்கவேண்டும்.[3] மேலும், நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் அத்துடன் அதன் குறிக்கோள்களின் அடைவு என்பவற்றுடன் பணவீக்கத்தில் அண்மைக்கால அசைவுகள், பணவீக்கத்தின் மூலங்கள், பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள் மற்றும் அத்தகைய எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை விளக்குகின்ற ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் அறிக்கையொன்றினை வெளியிடுவதற்கு மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கியைத் தேவைப்படுத்துகின்றது. இத்தேவைப்படுத்தலை நிறைவுசெய்யும் முகமாக மத்திய வங்கி ஒவ்வொரு ஆண்டினதும் பெப்புருவரியிலும் ஓகத்திலும் நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிடுகின்றது. மேலும், மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு ஆளுநர், ஆளும் மற்றும் நாணயக் கொள்கைச் சபைகளின் உறுப்பினர்கள்

1 ஒற்றைக் கொள்கை வீதப் பொறிமுறை பற்றிய விளக்கக் குறிப்பை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/statistics/otherpub/concept_note_on_opr_e.pdf இல் பெற்றுக்கொள்ளலாம்.

2 காலாண்டுச் சராசரி (ஆண்டிற்கு ஆண்டு) முதன்மைப் பணவீக்கம் (கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலமைந்த) தொடர்ச்சியான இரு காலாண்டுகளுக்கு ±2 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட எல்லையொன்றின் மூலம் இலக்கு வீதம் தவறவிடப்படுமாயின்.

3 பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கம் விலகியது தொடர்பில் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவின் கீழ் வேண்டப்பட்ட அறிக்கைகள் மத்திய வங்கி இணையத்தளத்தினூடாக அணுகமுடியும்.

மற்றும் துணை ஆளுநர்கள் பாராளுமன்றத்தினால் அல்லது அதன் குழுக்களால் அழைக்கப்படலாம். இத்தேவைப்படுத்தலை நிறைவுசெய்வதில் மத்திய வங்கியின் சபை உறுப்பினர்களும் மூத்த முகாமைத்துவமும் அத்தகைய குழுக்களின் கோரிக்கையின் பேரில் பாராளுமன்றக் குழுக்களில் அலுவலர்கள் சமூகமளிப்பதற்கு மேலதிகமாக, 2024 செத்தெம்பரிலும் 2025 சனவரியிலும் பாராளுமன்றத்தில் அத்துடன்/அல்லது அதன் குழுக்களில் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை மதிப்பிடுவதற்கு வாய்ப்பொன்றினை நாடியிருந்தனர். மேலும், மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்புச் சபையினைத் தாபிப்பதன் மூலம் அரசிறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கைகள் என்பவற்றிற்கிடையிலான மேம்பட்ட ஒருங்கிணைப்பு வசதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு மற்றும் இடர்நேர்வுகள் என்பன பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு ஒருங்கிணைப்புச் சபை காலாண்டு ரீதியாகக் கூடுவதுடன் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஈடுபடுகின்ற கருமங்களை ஒருங்கிணைத்து நிறைவுசெய்கின்றது.

## 3.2 நாணயக் கொள்கை நிலைப்பாடும் வழிமுறைகளும்

**இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2023ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் செயலுறுத்தப்பட்ட முக்கிய தளர்த்தல் மீது கட்டியெழுப்பப்பட்டு 2024இல் மேலும் தளர்த்தப்பட்டது.** ஒப்பீட்டளவில் மிதமான திரண்ட கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் குறைவடைந்த பணவீக்கம், நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள், இறுக்கமான இறைசார் வழிமுறைகளின் தொடர்ச்சி மற்றும் உயர்வடைந்த இலங்கை ரூபா என்பன ஆண்டுக்காலப்பகுதியில் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை மேலும் தளர்த்துவதற்கு போதுமான இடவசதியினை வழங்கின. 2023இன் பின்னையப் பகுதியில் கொள்கை வட்டி வீதங்கள் 650 அடிப்படைப் புள்ளிகளால் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டமை மற்றும் மிதிமிஞ்சிய கடன்வழங்கல் வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய சீராக்கங்களைக் கோரி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பரந்த வழிகாட்டல் என்பவற்றைத் தொடர்ந்து ஒட்டுமொத்த வட்டி வீதக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. ஆயினும், சீராக்க இடைவெளி குறிப்பாக சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் சில மிதமடைதலைக் காண்பித்தன. சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களில் மேலும் கீழ்நோக்கிய சரிப்படுத்தலுக்காக வசதி கிடைக்கப்பெற்றமை, தாழ்வான பணவீக்கச் சூழல் மற்றும் தோற்றப்பாடு என்பவற்றைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை 2024 மாச்சில் 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தது. அதனைத்தொடர்ந்து, 2024 யூலையில் கொள்கை வட்டி வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. இக்கொள்கை நடவடிக்கைகள், கடன்பெறுதல் செலவில் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய சீராக்கங்களை இயலச்செய்து இதனூடாக தனியார் துறைக்கான விரைவான கொடுகடன் விரிவுபடுதலை வசதிப்படுத்தி, உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிரளித்தலுக்கு ஆதரவளித்தன. அதனைத்தொடர்ந்து, சந்தை வட்டி வீதங்களில் மெதுவடைகின்ற சீராக்கம், குறைவடைந்த பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன 2024 நவெம்பரில் நாணயக் கொள்கையை மேலும் எச்சரிக்கையுடன் தளர்த்துவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்தது. ஏறத்தாழ 50 அடிப்படை புள்ளிகளால்[4] செய்திறன்வாய்ந்த விதத்தில் இக்கொள்கையைத் தளர்த்தல் ஓரிரவுக் கொள்கை வீதத்தின் அறிமுகப்படுத்தலுடன் இணைந்து இடம்பெற்று ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கான மாறுதலைப் பிரதிபலித்தது. இதற்கமைய, 2024இன் இறுதியளவில் நடப்பு நாணயக் கொள்கைத் தளர்த்தல் சுழற்சியின் போது கொள்கை வீதத்தில் ஒன்றுசேர்ந்த சீராக்கம் ஏறத்தாழ 775 அடிப்படை புள்ளிகளாக இருந்தன.

**2024 ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு பணச் சந்தையின் ஒட்டுமொத்த திரவத்தன்மை மிகையான மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை, அதன் சமச்சீரற்ற பரம்பல் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பேணுவதில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நிதியங்களை வழங்குவதற்கு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மத்திய வங்கி தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வழிவகுத்தது.** அத்தகைய வசதிகள் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மிதமிஞ்சித் தங்கியிருக்கும் சிக்கலைத் தீர்ப்பதற்கு மத்திய

4 கொள்கைச் சீராக்கத்திற்கு முந்திய சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்திற்கும் ஓரிரவுக் கொள்ளை வீதத்திற்குமான வேறுபாட்டால் அளவிடப்பட்டது.

## சிறப்புக் குறிப்பு 03
## ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான மாறுதல்

### அறிமுகம்

நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின்[1] கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மேம்பாடுகளின் பகுதியொன்றாக 2024 நவெம்பர் 27 தொடக்கம் இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கு இலங்கை மத்திய வங்கி நகர்ந்தது. இதற்கமைய, மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சமிக்ஞையிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அதன் முதலாந்தர நாணயக் கொள்கைக் கருவியாக ஓரிரவுக் கொள்கை வீதத்தினை அறிமுகப்படுத்தியது. ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான இம்மாறுதலானது நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலினை எளிதாக்குவதனையும் நாணயக் கொள்கை ஊடுகடத்தலின் வினைத்திறனை மேம்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.

### ஒற்றைக் கொள்கை வட்டி வீதமொன்றிற்கான தேவைப்பாடு

இலங்கையின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பானது பணச் சபை முறைமையிலிருந்து 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பான நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு படிப்படியாகப் பரிணாமமடைந்துள்ளது. இச்சட்டமானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதனை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாக அங்கீகரிக்கின்றது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் வெற்றியானது கொள்கை மாற்றங்களின் செயற்றிறன்மிக்க ஊடுகடத்தல் மற்றும் பணவீக்கத்தின் நிலைநிறுத்தப்பட்ட எதிர்பார்க்கைகள் என்பன மீது பாரியளவில் தங்கியுள்ளது. சந்தைக்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தெளிவான சமிக்ஞையிடலின் மூலம் இவை இரண்டும் செல்வாக்கிற்குட்பட்டுள்ளன. ஒற்றை வட்டி வீதமொன்றுடனான கொள்கைக் கருவியொன்று இந்நோக்கத்திற்கு நன்கு பயனளிக்கின்றது.

ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை உயர்ந்தளவிலான எல்லையாகவும் துணைநில் வைப்பு வசதி வீதத்தினை தாழ்ந்தளவிலான எல்லையாகவும் கொண்ட இரட்டைக் கொள்கை வட்டி வீதங்களான வீச்சு முறைமையொன்றின் கீழ் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளை மத்திய வங்கி மேற்கொண்டது. இவ்வீச்சானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகக் காணப்படுகின்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை[2] வழிநடத்தியது. இருப்பினும், முதன்மையாக அதன் சிக்கல்வாய்ந்ததன்மை மற்றும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சந்தைக்கு ஊடுகடத்துவதிலுள்ள வெளிப்படைத்தன்மையின்மை என்பன காரணமாக இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையானது சில குறைபாடுகளை எதிர்கொண்டது. இரட்டைக் கொள்கை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை அறிவித்தமையும், வங்கிகளிற்கிடையிலான பணச் சந்தை வீதமான சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் அசைவுகளை துணைநில் வீத வீச்சினுள் இருந்தமையும் சந்தைப் பங்கேற்பாளர்களிடையே சில நிச்சயமற்றதன்மைகளை உருவாக்கியது. மேலும், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது துணைநில் வீத வீச்சினுள் எங்கு காணப்பட வேண்டுமென்பதிலும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களாகக் கருதப்பட முடியுமா என்பதிலும் தெளிவின்மை காணப்பட்டது. இந்த வெளிப்படைத்தன்மையின்மையானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை எண்ணங்களைச் சந்தைப் பங்கேற்பாளர்களுக்குத் துல்லியமாக விளக்கப்படுத்துவதில் சிக்கல்தன்மையினை ஏற்படுத்தியிருக்கலாம்.

மேலும், கொள்கை வட்டி வீதங்கள் நிதியியல் நிறுவனங்களில் வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்களை நிர்ணயிப்பதற்கான முக்கிய அடிப்படை அளவுக்குறியீடுகளாகத் தொழிற்படுவதனால் பல்வேறு கொள்கை வட்டி வீதங்களைக் கொண்டிருப்பதானது நிதியியல் உற்பத்திகளின் விலையிடலில் சிக்கல்தன்மைகளுக்கு வழிவகுத்திருக்கலாம். இரட்டைக் கொள்கை வட்டி வீத அணுகுமுறையில் உள்ள இச்சிக்கல்வாய்ந்ததன்மைகள் கொள்கை வீத மாற்றங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தை வட்டி வீதங்களில் மெதுவான சீராக்கங்களுக்கு வழிவகுத்து, அதன்மூலம் பரந்தளவிலான பொருளாதாரத்தினைச் செல்வாக்கிற்குட்படுத்துவதில் நாணயக் கொள்கையின் செயற்றிறனைக் குறைவடையச்செய்திருக்கக்கூடும்.

இதற்கமைய, நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் சமிக்ஞையிடல் மற்றும் தொடர்பூட்டல் என்பவற்றினை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தினைக் கருத்திற்கொண்டு, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பின் பின்பற்றுகைக்கான வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான செயன்முறையில் மத்திய வங்கி ஈடுபட்டது. ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையினை நோக்கிய முன்னேற்றத்தின் ஆரம்பப் படிமுறையொன்றாக, இரட்டைக் கொள்கை வட்டி வீதங்களினால் உருவாக்கப்பட்ட துணைநில் வீத வீச்சின் அளவினை மத்திய வங்கி படிப்படியாகக் குறைத்தது. மேலும், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது

---

1 இம்மாறுதல் குறித்த மேலதிக தகவல்களிற்கு “இலங்கை மத்திய வங்கி ஓரிரவு கொள்கை வீதத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலமாக ஒற்றைக் கொள்கை வட்டி வீத பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துகின்றது” எனும் ஊடக வெளியீட்டினையும் https://www.cbsl.gov.lk/sites/default/files/concept_note_on_opr_e.pdf இனூடாகக் கிடைப்பனவாகவுள்ள விளக்கக் குறிப்பினையும் பார்க்கவும்.

2 சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமென்பது குறிப்பிட்டதொரு திகதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிற்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற ஓரிரவுப் பிணையமல்லாத வங்கிளிற்கிடையேயான அழைப்புப் பண கொடுக்கல்வாங்கல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதமாகும்.

3

வினைத்திறன்மிக்க திரவத்தன்மை முகாமைத்துவத்தின் ஊடாக ஏறத்தாழ விரும்பத்தக்க வீதமொன்றில் பேணப்பட்டதுடன், இது ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்குத் தடைகளெதுவுமின்றி மாறுதலடைவதற்கு மத்திய வங்கிக்கு ஆதரவளித்தது. அதன்பின்னர், பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, கொள்கைப் பரிசீலனைகள் மற்றும் ஆர்வலர்களுடனான கலந்தாலோசனைகள் என்பவற்றினைத் தொடர்ந்து 2024 நவெம்பரில் ஒற்றைக் கொள்கை வட்டி வீதக் கட்டமைப்பொன்றினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

### ஒற்றைக் கொள்கை வட்டி வீதத்தின் நன்மைகள்

ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான நகர்வானது பல அனுகூலங்களை வழங்கி, அதன்மூலம் நாணயக் கொள்கையின் செயற்றிறனைக் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியியல் சந்தைகளுக்குத் தெளிவான மற்றும் சீரான சமிக்ஞையொன்றினை வழங்குவதன் மூலம், இது கொள்கைப் போக்கில் நிச்சயமற்றதன்மையினைக் குறைப்பதுடன் சந்தைப் பங்கேற்பாளர்கள் அதிகளவிலான நம்பிக்கையுடன் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதனை வசதிப்படுத்துகின்றது. இம்மேம்பட்ட வெளிப்படைத்தன்மையானது நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலினை வலுப்படுத்தி, நாணயக் கொள்கை நிலைப்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் குறுங்கால வட்டி வீதங்களுக்கும் பரந்தளவிலான பொருளாதாரத்திற்கும் மிகவும் செயற்றிறன்மிக்க விதத்தில் மாற்றப்படுவதனை நிச்சயப்படுத்துகின்றது.

மேலும், அடிப்படை அளவுக்குறியீட்டு வட்டி வீதமாகத் தொழிற்படுகின்ற ஒற்றைக் கொள்கை வட்டி வீதமொன்றுடன் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் நிதியியல் உற்பத்திகளைத் துல்லியமாக விலையிட முடியுமென்பதுடன், இது சந்தை வட்டி வீதங்களில் நிலையானதன்மையினை நிச்சயப்படுத்துகின்றது. இது முதலீட்டாளர் நம்பிக்கைக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற நிதியியல் முறைமையினுள் நிதியங்களின் இயங்குதன்மையினை மேம்படுத்துகிறது, சிறந்த திரவத்தன்மை முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துகின்றது மற்றும் அதிகளவில் ஊகிக்கத்தக்க வட்டி வீதச் சூழலொன்றினை ஊக்குவிக்கின்றது.

### ஒற்றைக் கொள்கை வட்டி வீதத்தின் தொழிற்படுத்துகை


ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பானது குறுங்கால வட்டி வீதங்களை நிலைநிறுத்துவதன் மூலம் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலினை நெறிப்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஓரிரவு கொள்கை வீதத்தின் அறிமுகத்துடன் மத்திய வங்கி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை அறிவிக்கப்பட்ட ஓரிரவு கொள்கை வீதத்தில் அல்லது அதனை அண்மித்த மட்டத்தில் பேணுவதற்கு இலக்கிடுகின்றது. மேலும், மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் பொருட்டு தேவைக்கேற்ப நாணயக் கொள்கைச் சபையினால் ஓரிரவுக் கொள்கை வீதமானது காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டுச் சீராக்கப்படும்.

ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கான மாறுதலினைத் தொடர்ந்து, இரட்டைக் கொள்கை வட்டி வீத முறைமையின் கீழ் மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வீதங்களாகக் கருதப்பட்ட துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன இதன்பின்னர் அவ்வகிபாகத்தினை ஆற்றாது. இருப்பினும், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன மத்திய வங்கியுடனான ஓரிரவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறையே துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பவற்றிற்குப் பொருந்தக்கூடிய வீதங்களாகத் தொடர்ந்து தொழிற்படும்.[3] மேலும், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுடன் ஓரிரவுக் கொள்கை வீதத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதுடன் வங்கிகளிற்கிடையிலான அழைப்புப் பண கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றிற்கு ஓரிரவு மற்றும் குறுங்காலத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தாழ்ந்தளவிலான மற்றும் உயர்ந்தளவிலான எல்லைகளாகவும் செயற்படுகின்றன.

இதற்கமைய, ஓரிரவு மற்றும் குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களுக்கு, ஓரிரவு கொள்கை வீதமானது விலைக்குறிப்பீட்டு வீதங்களிற்கான உயர்ந்தளவிலான எல்லையாகத் தொழிற்படுகின்ற வேளையில் துணைநில் வைப்பு வசதி வீதமானது தாழ்ந்தளவிலான எல்லையாகத் தொழிற்படுகின்றது. சந்தையிலிருந்து விஞ்சியளவிலான திரவத்தன்மையினை உள்ளீர்க்கின்ற வழிமுறையொன்றாக மீள்கொள்வனவு ஏலங்களை மத்திய வங்கி நடாத்துகிறது. பங்கேற்கும் நிறுவனங்கள் மிகையான திரவத்தன்மையினைக் கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு இரண்டு மாற்றுவழிகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் தமது விஞ்சியளவிலான நிதியங்களை துணைநில் வைப்பு வசதி வீதத்தில் மத்திய வங்கியில் வைப்புச் செய்யலாம் அல்லது மீள்கொள்வனவு ஏலங்களில் பங்கேற்கலாம். மீள்கொள்வனவு

3 துணைநில் வைப்பு வசதி வீதமென்பது பங்கேற்கும் நிறுவனங்கள் துணைநில் வைப்பு வசதியின் கீழ் ஓரிரவு அடிப்படையொன்றில் மத்திய வங்கியில் மேற்கொள்கின்ற அவர்களது விஞ்சியளவிலான நிதிய வைப்புக்களிற்கு வழங்கப்படும் வீதமாகக் காணப்படுகின்ற வேளையில் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமென்பது பங்கேற்கும் நிறுவனங்கள் துணைநில் கடன்வழங்கல் வசதியின் கீழ் ஓரிரவு அடிப்படையொன்றில் மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைக் கடன்பெற முடியுமான வீதமாகக் காணப்படுகின்றது.

வரைபடம் சி.கு. 3.1: ஒற்றைக் கொள்கை வட்டி வீதக் கட்டமைப்பு





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஏலங்கள் பங்கேற்கும் நிறுவனங்களுக்குக் கவர்ச்சிகரமானதாகத் தொடர்ந்தும் காணப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி துணைநில் வைப்பு வசதி வீதத்திற்குச் சமமான குறைந்தபட்ச விலைக்குறிப்பீட்டு வீதமொன்றினையும் ஓரிரவு கொள்கை வீதத்தில் வரையறுக்கப்பட்ட உயர்ந்தபட்ச விலைக்குறிப்பீட்டு வீதமொன்றினையும் நிறுவுகின்றது. பங்கேற்கும் நிறுவனங்கள் தமது விஞ்சியளவிலான நிதியங்களை துணைநில் வைப்பு வசதியில் வைப்பிலிடுகின்ற தெரிவினை எப்பொழுதும் கொண்டிருக்குமென கருதினால், துணைநில் வைப்பு வசதி வீதமானது ஓரிரவு மற்றும் குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துவதற்கு வினைத்திறன்மிக்க குறைந்தபட்ச வீதமொன்றினை உருவாக்கின்றது.

மறுபுறம், ஓரிரவு மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களிற்கு, துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமானது உயர்ந்தளவிலான எல்லையாகத் தொழிற்படுகின்ற வேளையில் ஓரிரவுக் கொள்கை வீதமானது தாழ்ந்தளவிலான எல்லையினை வரையறுக்கின்றது. சந்தையினுள் திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்காக நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை மத்திய வங்கி நடாத்துகின்றது. பங்கேற்கும் நிறுவனங்கள் திரவத்தன்மைப் பற்றாக்குறைகளை எதிர்கொள்கின்றபோது, அவர்களுக்கும் இரண்டு மாற்றுவழிகள் காணப்படுகின்றன. அவர்கள் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தில் மத்திய வங்கியிடமிருந்து நிதியங்களைக் கடனாகப்பெற முடியும் அல்லது அறிவிக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களில் பங்கேற்று தகுதிவாய்ந்த பிணையங்களை வைத்து திரவத்தன்மையினைப் பெற்றுக்கொள்ள முடியும். நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களின் போட்டித்தன்மையினைப் பேணுவதற்கு, மத்திய வங்கி ஓரிரவுக் கொள்கை வீதத்திற்குச் சமமான குறைந்தபட்ச விலைக்குறிப்பீட்டு வீதமொன்றினை நிர்ணயிக்கின்ற வேளையில், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தில் உயர்ந்தபட்ச விலைக்குறிப்பீட்டு வீதமானது வரையறுக்கப்படுகின்றது. பங்கேற்கும் நிறுவனங்கள் துணைநில் கடன்வழங்கல் வசதியிலிருந்து கடன்பெறுகைகளை மேற்கொள்வதற்கான மாற்றுவழியினைக் கொண்டிருப்பதனால்,

வரைபடம் சி.கு. 3.2: ஓரிரவு கொள்கை வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் துணைநில் வசதி வீதங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஓரிரவு மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துவதற்கு துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமானது வினைத்திறன்மிக்க உச்சவரம்பு வீதமொன்றினை உருவாக்கின்றது.

## பணச் சந்தையில் நடைமுறைப்படுத்தலிற்குப் பின்னரான விளைவுகள்

எதிர்பார்க்கப்பட்டவாறு, ஒற்றை கொள்கை வட்டி வீதப் பொறிமுறையின் அறிமுகப்படுத்தலுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஓரிரவு கொள்கை வீதத்தினை நோக்கிப் படிப்படியாகச் சீராக்கப்பட்டதுடன் 2024 திசெம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்திலிருந்து ஓரிரவு கொள்கை வீதத்திற்கு அண்மையில் தொடர்ந்து காணப்பட்டது. ஓரிரவு கொள்கை வீதத்தினை நோக்கிய சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் இவ்விரைவான சீராக்கமானது வங்கிகளிற்கிடையிலான அழைப்பு பணச் சந்தையின் அதிகரித்தளவிலான நடவடிக்கையினால் பெருமளவு ஆதரவளிக்கப்பட்டது. தற்போது, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஓரிரவு கொள்கை வீதத்தில் அல்லது அதற்கண்மையில் தொடர்ந்து காணப்படுவதானது ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கான சீரானதொரு மாறுதலினை வெளிப்படுத்துகின்றது. மேலும், புதிய முறைமைக்கான சந்தையின் விரைவான ஒருங்கமைப்பினைப் பிரதிபலித்து, குறுங்கால சந்தை வட்டி வீதங்களின் சீராக்கங்கள் ஏனைய அடிப்படை அளவுக்குறியீட்டு வட்டி வீதங்களுக்கு ஏற்கனவே ஊடுகடத்தப்பட்டுள்ளமையானது

ஒற்றைக் கொள்கை வட்டி வீதமொன்றிற்கான மாறுதலானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க படிமுறையொன்றினைக் குறிக்கின்றது. இது நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்றிறன் என்பவற்றினை மேம்படுத்தும் வேளையில், சந்தை ஊகிப்பினை மேம்படுத்துவதற்கும் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நெறிப்படுத்தப்பட்ட திரவத்தன்மை முகாமைத்துவத்துடன் இணைந்து நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளில் மேம்பட்ட தெளிவாந்தன்மையுடன், நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலும் வலுப்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மாறுதலானது மத்திய வங்கியின் கொள்கை நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இது சந்தைகள் மற்றும் பரந்தளவிலான பொருளாதாரம் என்பவற்றில் நாணயக் கொள்கைச் சமிக்ஞையிடலினதும் ஊடுகடத்தலினதும் வினைத்திறன் மற்றும் செயற்றிறனை வலுப்படுத்தும். ஒட்டுமொத்தமாக, நாணயக் கொள்கைச் செயற்றிறனை மேம்படுத்துவதானது நிலையானதொரு பொருளாதாரத்தினை உருவாக்கி, முதலீட்டாளர்களின் மனோபாவங்களை மேம்படுத்தத் துணைபுரிவதுடன் பொருளாதாரத்தின் விலை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற குறிக்கோளினை அடைவதற்கும் உதவுகின்றது.

வங்கியின் துணைநில் வசதிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் 2023 சனவரியிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் 2024 ஆரம்பத்தில் அகற்றப்பட்டன. மேம்பட்ட சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் சந்தைச் செயற்பாடு என்பவற்றைப் பரிசீலனையில் கொண்டு இது அமைந்திருந்தது. இதற்கமைய, 2024 பெப்புருவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தின் பயன்பாடு மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு அகற்றப்பட்ட அதேவேளை துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடு நாட்காட்டி மாதகாலப்பகுதியில் 5 தடவைகள் தொடக்கம் 10 தடவைகள் வரை தளர்த்தப்பட்டதுடன் 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அகற்றப்பட்டன. 2024இன் பிற்பகுதியை நோக்கி வெளிநாட்டு வங்கிகள் மூலமான பணச் சந்தை நடவடிக்கைகள் மீது இணைத்தரப்பு வரையறைகளை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கின்ற நாட்டிற்கான தரமுயர்த்தல்கள் மூலம் பகுதியளவில் துணையளிக்கப்பட்டு திரவத்தன்மை மிகைகள் கட்டியெழுப்பப்பட்டதுடன் உள்நாட்டு பணச் சந்தைச் செயற்பாடு ஓரளவிற்கு மேம்பட்டது. ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்த ஏலங்களை நடாத்துதலூடாக திரவத்தன்மை உட்செலுத்தல்களைக் கட்டுப்படுத்தல் உள்ளடங்கலாக மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை படிப்படியாகக் குறைப்பதற்கு இடவசதியினை அதிகரித்த திரவத்தன்மை மற்றும் குறைக்கப்பட்ட சமச்சீரற்றத் தன்மை என்பன வழங்கின.

**ஆண்டு முழுவதும், மத்திய வங்கியானது அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் பரிமாற்றத்தினை மேம்படுத்துவதையும் பணவீக்க இலக்கைத் தவறவிட்ட பணச்சுருக்க சூழலொன்றில் ஆர்வலர்களின் எதிர்பார்ப்புகளை முகாமைத்துவம் செய்வதையும் இலக்காகக் கொண்டு நாணயக் கொள்கை தொடர்பாடலை மேம்படுத்துவதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டது.** பாரம்பரிய கொள்கைக் கருவிகளைத் தொடர்ந்து பயன்படுத்தும் அதேவேளை, நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறையில் பிரதான ஆர்வலர்களான வீடுகள் மற்றும் வியாபாரங்களுக்கிடையிலான நடத்தையை வடிவமைப்பதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதனை அடைவதற்கு, மத்திய வங்கியானது நாணயக் கொள்கைத் தீர்மானங்கள், உள்ளார்ந்த காரணம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு, குறிப்பாக பணவீக்க எறிவுகள் என்பனவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தியது. இந்த முயற்சிகள் எதிர்பார்ப்புகளை முகாமைத்துவம் செய்வதில் முக்கியமாகவிருந்ததுடன், குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் காணப்பட்ட பணச்சுருக்க நிலைமைகள் கேள்வி அல்லது பொருளாதார நடவடிக்கைகளின் பற்றாக்குறையால் அல்ல, மாறாக வழங்கலினால் உந்தப்பட்ட நிலையற்ற காரணிகளால் ஏற்பட்டன. ஆளுநர் தலைமையிலான பத்திரிகை வெளியீடுகள் மற்றும் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பு நாணயக் கொள்கை தொடர்பாடல் மூலோபாயத்தின் மையமாகவிருந்து நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் பற்றிய நிகழ்நேர நுண்ணறிவுகளை வழங்கியது. ஊடக ஈடுபாடு தொடர்ந்து மேம்பட்டு, நாணயக் கொள்கை மற்றும் பேரண்டப் பொருளாதாரப் போக்குகள் மீதான இன்றியமையாத மற்றும் நுண்ணறிவு கலந்துரையாடல்களை வளர்த்தது. மேலும், பரந்தளவிலான பொதுமக்கள் சென்றடைதலை உறுதிப்படுத்துவதற்காக, மத்திய வங்கியானது சமூக ஊடகத்தளங்களினதும் தேசிய மொழிகளில் தயாரிக்கப்பட்ட ஒற்றை பக்கச் சுருக்கங்கள் மற்றும் குறுகிய காணொளி துணுக்குகள் உள்ளடங்கலான எளிமைப்படுத்தப்பட்ட தொடர்பாடல் வடிவங்களினும் பயன்பாட்டை விரிவுபடுத்தியது. இலக்கிடப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அடிக்கடி இடம்பெறும் உள்ளக மற்றும் வெளியகக் கருத்தரங்குகள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அதிகாரிகளை உள்ளடக்கிய பொதுமக்களைச் சென்றடையும் முயற்சிகள் மூலம் ஆர்வலர்களின் ஈடுபாடு மேலும் பலப்படுத்தப்பட்டது.

**மத்திய வங்கிச் சட்டத்திற்கிணங்க, மத்திய வங்கியானது சட்டரீதியாக கட்டாயப்படுத்தப்பட்ட அறிக்கைகளை வெளியிடுவதினூடாக வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயற்பட்டது.** 2024 பெப்புருவரி மற்றும் ஓகத்து மாதங்களில் வெளியிடப்பட்ட நாணயக் கொள்கை அறிக்கைகள் முன்னைய நாணயக் கொள்கைத் தீர்மானங்களையும் ஆதாரப் பகுப்பாய்வுகளையும் ஆவணப்படுத்தியது மட்டுமன்றி பணவீக்க எறிவுகள் மற்றும் எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் போன்ற முன்னோக்கிய நுண்ணறிவுகளையும் வழங்கின. இன்றியமையாத உரையாடல் மற்றும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக, மத்திய வங்கி தொழில்நுட்ப கலந்துரையாடல் அமர்வுகளை நடத்தி, ஊடகவியலாளர்கள்,

## சிறப்புக் குறிப்பு 04
## நாணயக் கொள்கைப் பொறுப்புக்கூறல் மற்றும் பணவீக்க இலக்குகள்

### அறிமுகம்

மத்திய வங்கியொன்றின் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் அதன் ஆர்வலர்களுக்கான அவற்றின் தாக்கங்களை விளக்கி நியாயப்படுத்த நாணயக் கொள்கைப் பொறுப்புக்கூறல் தேவைப்படுத்துகின்றது. மத்திய வங்கி வெளிப்படையானதாகவும் நம்பகமானதாகவும் இருக்கின்ற அதேவேளை, சுதந்திரமாக தொடர்ந்து செயற்படுவதற்கு இந்நியாயப்படுத்தல் முக்கியமானதாக விளங்குகின்றது. மத்திய வங்கியின் பொறுப்புக்கூறல் பொதுமக்கள், வியாபாரங்கள் மற்றும் முதலீட்டாளர் என்போர் மத்தியில் நம்பிக்கையினை வலுப்படுத்தி, அதன் தீர்மானங்கள் அரசியல் அல்லது வெளிவாரி செல்வாக்கு அன்றி பொருளாதாரரீதியான காரணப்படுத்தல் மூலமாக வழிநடத்தப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துகின்றது. பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலைநிறுத்தப்பட்டு பணவீக்கத்தை உறுதியாகப் பேணுவதற்கு இந்நம்பிக்கை உதவுகின்றது. இதன் பயனாக, பொருளாதார கொள்கை உருவாக்கத்தில் நம்பிக்கையினை வலுப்படுத்துகின்றது. மாறாக, பலவீனமான பொறுப்புக்கூறல் கட்டமைப்பானது நம்பிக்கையினை வலுவிழக்கச் செய்து பணவீக்கம் சார்ந்த இடர்நேர்விற்கும் பொருளாதார உறுதியின்மைக்கும் வழிவகுக்கின்றது.

செயற்றிறன்வாய்ந்த பொறுப்புக்கூறல் வழிமுறையானது தெளிவான மேற்பார்வை, வெளிப்படைத்தன்மை மற்றும் செயலாற்ற மதிப்பீடுகள் என்பவற்றை ஈடுபடுத்துகின்றது. வெளிவாரிக் காரணிகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற பெறுபேறுகளுடன் இணைந்து பொருளாதார தோற்றப்பாடு மற்றும் நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கான நியாயப்படுத்தல்கள் பற்றி அறிக்கைகளை வெளியிடுவதற்கு மத்திய வங்கிகள் அதிகரித்தளவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய வங்கிகளின் மிகுந்த பொறுப்புக்கூறலானது அவற்றின் ஆளுகை ஏற்பாடுகள், கொள்கைகள், தொழிற்பாடுகள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுக்கிடையிலான தொடர்பு என்பவற்றில் மேம்பாடுகளை விளைவிக்கின்றது. இந்நோக்கில், பொறுப்புக்கூறும் மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க மத்திய வங்கிகள் பொதுவாக, தாழ்வான மற்றும் உறுதிநிலையான பணவீக்க வீதங்களையும் சிறந்த பொருளாதார செயலாற்றத்தினையும் கொண்டவையென ஆராய்ச்சி எடுத்துக்காட்டுகின்றன்றது (Mishkin, 1997). எனினும், மிகக் கடுமையான கண்காணிப்பு தீர்மானமெடுத்தலை சில சந்தர்ப்பங்களில் மெதுவடையச் செய்து அல்லது அதிக எச்சரிக்கையை ஏற்படுத்தி பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில் தீர்க்கமான ஆனால் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து மத்திய வங்கியைத் தடுக்கலாம் (Goodhart, 2010).

மத்திய வங்கியின் சுதந்திரம் மற்றும் மிகுந்த பொறுப்புக்கூறல் உள்ளார்ந்த முறையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன (Adrian and Khan, 2019). வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும் மத்திய வங்கியின் சுதந்திரத்திற்கான முன்தேவைப்பாடுகளாகக் காணப்பட்டு சிறந்த நாணயக் கொள்கைக்கான அடிப்படையினை வழங்குகின்றன. அறிக்கைகளை வெளியிடுதல் அல்லது சட்டவாக்க நிறுவனங்களுக்கு முன் சாட்சியமளித்தல் போன்ற தீர்மானங்கள் பற்றிய தகவல்களை அரசாங்கம், பொதுமக்கள் மற்றும் வேறு கொள்கைவகுப்பாளர்கள் என்போருக்கு கிரமமாக வழங்குவதற்கு வெளிப்படைத்தன்மை மத்திய வங்கிகளைத் தேவைப்படுத்துகின்றது.

### பணவீக்க இலக்கை மீறுகின்ற காலப்பகுதியில் மத்திய வங்கியின் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவம்

பணவீக்க இலக்கிடல் என்பது ஒரு மத்திய வங்கிக்கு வழங்கப்படுகின்ற, குறிப்பிட்ட காலத்திற்குள் அடையப்படவேண்டிய பணவீக்க இலக்கைக் கொண்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பாகும். நாணயக் கொள்கையை நடாத்துவதன் மூலம், முக்கியமாக அதன் கொள்கை வட்டி வீதங்களை சீராக்குவதன் மூலம், மத்திய வங்கிகள் பணவீக்கத்தினை ஓர் இலக்கு மட்டத்திற்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றன, மேலும் இது நிச்சயமற்றதன்மையைக் குறைத்து வர்த்தகச் சுழற்சித் தளம்பல்களை மெதுவடையச்செய்கின்றது. எனினும், இணங்கிய இலக்கிடப்பட்ட மட்டத்தினுள் பணவீக்கத்தினைப் பேணுவதற்கு மத்திய வங்கிகளுக்கு எப்போதும் இயலுமானதாக இருப்பதில்லை. நிர்வகிக்கப்பட்ட விலைச் சீராக்கங்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய மூலங்களிலிருந்து தோன்றுகின்ற நிரம்பல் பக்க இடையூறுகள் உள்ளடங்கலாக பல்வேறு காரணங்கள் இதற்கு காரணமாக அமையக்கூடும். பொதுமக்கள் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் பணவீக்கத்தை அதன் இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு மீண்டும் கொண்டுவருவதற்கும் வலுவான பொறுப்புக்கூறலானது குறிப்பாக அதன் இலக்கிலிருந்து பணவீக்கம் விலகும் போது அத்தியாவசியமானதாக அமையும். மத்திய வங்கியானது விலகலுக்கான காரணங்களை விளக்கி, சீராக்க நடவடிக்கைகளை எடுத்து, அவற்றின் கொள்கைத் தீர்மானங்களில் வெளிப்படைத்தன்மையினைப் பேணவேண்டும். இந்நடவடிக்கைகளை வழிநடாத்துவதற்கு சட்ட ரீதியான கட்டமைப்புக்கள் பெரும்பாலும் இடம்பெற்று மத்திய வங்கிகள் பதிலளிப்பனவாகவும் செயற்றிறன்வாய்ந்தனவாகவும் இருப்பதை உறுதிசெய்கின்றன (Adrian and Khan, 2019).

3

3

மத்திய வங்கிகள் மற்றும் அரசாங்கங்கள் உறுதிநிலையை மீட்பதற்கான செயற்றிறன்மிக்க கொள்கைகளை வடிவமைக்க பணவீக்க மீறல்களின் காரணங்களை விளங்கிக்கொள்வது உதவுகின்றது. வரலாற்றுரீதியான அனுபவங்களைக் கருத்திற்கொள்கையில், பணவீக்கம் அதன் இலக்கிலிருந்து விலகிச்செல்வதற்கு வெளிநாட்டு அதிர்வுகளான எரிபொருள் விலை உயர்வுகள், நிரம்பல் பக்க இடையூறுகள் மற்றும் உலகளாவிய நிச்சயமின்மைகள் என்பன பொதுவான காரணிகளாகக் காணப்படுகின்றன. ஆயினும், உள்நாட்டுக் காரணிகளின் விளைவாகவும் இது நிகழக்கூடும். உதாரணமாக, கனடா வங்கி 2008இல் பணவீக்க உயர்விற்கு முக்கிய காரணமாக பண்ட விலை அதிகரிப்புக்களை குறிப்பிட்டதுடன் பணவீக்க கட்டுப்பாட்டில் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் விளைவுகளைக் குறித்துக்காட்டியது (Bank of Canada, 2008). அதேபோன்று, நியூசிலாந்து ரிசர்வ் வங்கி, நுகர்வு வரிகளின் அதிகரிப்பு உள்ளிட்ட நிரம்பல் பக்க காரணிகள் 2011 இல் பணவீக்கத்தை எவ்வாறு அதிகரித்தன என்பதை விளக்கியதுடன், பூமியதிர்ச்சிக்கு பின்னர் பணவீக்கம் எவ்வாறு பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது என்பதை மேலும் விளக்கியது (Reserve Bank of New Zealand, 2011). செக் தேசிய வங்கி போன்ற சில மத்திய வங்கிகள், பாரிய பொருளாதார அதிர்வுகளை எதிர்கொள்கின்றபோது அவற்றின் ஆணைகளில் தற்காலிக விலகல்களைக் கூட அனுமதிக்கின்றன (Rusnok, 2018). மேலதிகமாக, வளர்ந்து வரும் பொருளாதாரங்களில், வளர்ந்த பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் நிரம்பல் அதிர்வுகள் பாரியளவில் அடிக்கடி நடைபெறக்கூடியதாக காணப்படுகின்றது. ஆதலால், நிரம்பலுடன் தொடர்புடைய காரணிகள் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் இலக்குகளிலிருந்தான பணவீக்க விலகல்களுக்கு பொதுவான காரணங்களாக அமைந்தன.

இலக்கை நோக்கி பணவீக்கம் திரும்பலடைகின்ற வேகம், பொருளாதார சூழ்நிலை மற்றும் எடுக்கப்படும் கொள்கை வழிமுறைகளின் செயற்றிறன் என்பன மீது சார்ந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக, பொதுவாக வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் பணவீக்கத்திற்குச் செல்வாக்குச் செலுத்துவதற்கு 18-24 மாதங்கள் எடுப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஒரு நாட்டின் பொருளாதார, நிதியியல் சந்தைச் சூழ்நிலைகளைப் பொறுத்து இது நீண்டதாக அல்லது குறுகியதாக அமையக்கூடும். திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் முன்னோக்கிய வழிகாட்டல் போன்ற மேலதிகக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு, விசேடமாக நிரம்பல் பக்கக் காரணிகள் மூலம் பணவீக்கம் தூண்டப்படும் போது, மத்திய வங்கிகள் தயாராகவிருக்க வேண்டும். அரசாங்கப் பக்கத்திலிருந்து வரும் சில கொள்கைகளும் பணவீக்கத்தை முகாமை செய்வதற்கு, விசேடமாக நிரம்பல் பக்க காரணிகள் மீது, உதவிசெய்கின்றன. வரிகள் மற்றும் நிருவகிக்கப்படும் விலைகள் போன்ற குறுகிய கால கொள்கைகளும் வானிலை தொடர்புபட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நீண்டகாலக் கொள்கைகளும், உணவு மற்றும் வலுப் பணவீக்கத்தின் தற்காலிக தளம்பல்களைத் தீர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. எவ்வாறாயினும், நிரம்பல் பக்கப் பிரச்சினைகள் பொதுவாக மாற்றமடைபவை என்பதையும் காலப்போக்கில் இயற்கையாக சரியாகக்கூடியவை என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மறுபுறத்தில், பணவீக்க விலகல்கள் தொடர்ந்து இருந்தால், அத்தகைய விலகல்களுக்கான காரணிகளைப் பொருட்படுத்தாமல், மத்திய வங்கிகள் பணவீக்க எதிர்பார்க்கைகளை மீண்டும் நிலைநிறுத்த கடமைப்பட்டுள்ளதுடன் பணவீக்கத்தை இலக்கு மட்டங்களுக்கு விரைவில் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கமைய, இச்செய்திகளை பல்வேறு பொருளாதார ஆர்வலர்களுக்கும் எடுத்துச் செல்வதில் மத்திய வங்கி தொடர்பூட்டல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### 2023ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழான நாணயக் கொள்கை பொறுப்புக்கூறல் ஏற்பாடுகள்

2023ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கிக்கு வலுவான நாணயக் கொள்கைப் பொறுப்புக்கூறலையும் தொழிற்பாட்டு சுதந்திரத்தினையும் வழங்குகின்றது. மத்திய வங்கிச் சட்டத்தின் 26ஆம் பிரிவு, மத்திய வங்கியினால் அடையப்பட வேண்டிய பணவீக்க இலக்கை எடுத்துரைக்கின்ற நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையொன்றை நிதி அமைச்சரும் மத்திய வங்கியும் கைச்சாத்திடுதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலமைந்த காலாண்டு சராசரிப் பணவீக்கத்தை இரண்டு தொடர்ச்சியான காலாண்டுகளுக்கு 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கினை அண்மித்த எல்லையினுள் (±2 சதவீதப் புள்ளிகள்) பேணுவதற்கு மத்திய வங்கி தவறுமாயின் கௌரவ நிதி அமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வறிக்கை பொதுமக்களுக்குக் கிடைப்பனவாக இருப்பதுடன் விலகலுக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் எடுக்கப்பட வேண்டிய சீராக்க நடவடிக்கைகள் மற்றும் பணவீக்கத்தை இலக்கு வீச்சுக்கு மீண்டும் கொண்டு வருதவதற்காக மதிப்பிடப்பட்ட காலச்சட்டகம் என்பவற்றையும் உள்ளடக்க வேண்டும். மேலும், மத்திய வங்கிச் சட்டத்தின் 27ஆம் பிரிவிற்கமைய, மத்திய வங்கியானது பணவீக்கத்தின் அண்மைக்கால போக்குகள், பணவீக்கத்திற்கான மூலங்கள் மற்றும் பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள் அத்துடன் அத்தகைய எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை விளக்கி ஆறு மாதத்திற்கு ஒரு தடவை அறிக்கையொன்றை வெளியிட தேவைப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கிச் சட்டத்தின் 80ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கி ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் குறைந்தது ஒரு தடவை அதன் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல்

மற்றும் அதன் குறிக்கோள்களை அடைதல் பற்றி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். நாணயக் கொள்கை அறிக்கையானது மேற்குறிப்பிட்ட 27 மற்றும் 80ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுத்தல்களை நிறைவுசெய்யும் விதத்தில் வெளியிடப்படுகின்றது. இதற்கமைய, விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்குத் தேவையான தொழிற்பாட்டுச் சுதந்திரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளமையினால், இலங்கையின் பொருளாதாரக் கொள்கை உருவாக்கத்தில் மத்திய வங்கிச் சட்டம் ஒரு வரலாற்று மைல்கல்லைக் குறிக்கும் அதேவேளையில், அதன் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூறுவதுடன் விலை உறுதிப்பாட்டு குறிக்கோளினை அடையச்செய்கின்றது.

## அண்மைய பணவீக்க இலக்கு மீறல் மற்றும் பொறுப்புக்கூறல் வழிமுறைகளுடனான இலங்கையின் அனுபவம்

இலங்கையின் பணவீக்கம் 2024இன் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில் இலக்கிற்கு கீழாக இரண்டு சதவீதப் புள்ளிகளுக்கு மேலாக வீழ்ச்சியடைந்தது. குறைவடைந்த மின்சார மற்றும் எரிபொருள் விலைகள் மற்றும் குறைந்த உணவுப் பணவீக்கம் போன்ற நிரம்பல் பக்க காரணிகள் இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. மேலும் இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வும் குறைந்த பணவீக்கத்திற்குப் பங்களித்தது. இது மத்திய வங்கிச் சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு, பணவீக்கம் அதன் இலக்கிலிருந்து விலகியமைக்காக பாராளுமன்றத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெறச் செய்வதற்கும் மத்திய வங்கியை தூண்டியது. 2024இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டு தொடர்பிலான முதலாவது அத்தகைய அறிக்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் தற்போது கிடைக்கப்பெறுகின்ற அதேவேளை மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டு தொடர்பான அறிக்கை நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் வரவிருக்கும் காலத்தில் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெறும். மேலும், பணவீக்கமானது மேலே குறிப்பிடப்பட்ட அதே காரணங்களுக்காக 2025இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் 2 சதவீதப் புள்ளிகளுக்கு மேல் தொடர்ந்தும் இலக்கிற்கு கீழே காணப்பட்டமையினால் 2024 இன் நான்காம் காலாண்டுக்கும் 2025இன் முதலாம் காலாண்டுக்கும் தொடர்புடைய அதனையொத்த அறிக்கையொன்றினை மத்திய வங்கி சமர்ப்பிக்கும். அண்மைய கணிப்புகளின்படி, மத்திய வங்கி, 2025 மாச்சு முதல் பணச்சுருக்க நிலைமைகள் தளரத் தொடங்கியுள்ளதை அவதானித்த வேளையில், இந்த கணிப்புகளை எட்டுவதில் பயன்படுத்தப்படும் தரவு, அனுமானங்கள் மற்றும் தீர்ப்புகளால் ஆதரிக்கப்படும் பொருளாதார நிலைமைகளில் கணிசமான விலகல்கள் இல்லாதிருக்கும் நிலையில், தற்போதைய பணச்சுருக்கம் தாற்காலிகமானதாக இருக்குமெனவும், 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பணவீக்கம் ±2 சதவீதப்புள்ளிகள் என்ற இலக்கிற்குள் திரும்புமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பணவீக்க இலக்கு மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் தொடர்பான உலகளாவிய அனுபவங்கள்

பணவீக்க இலக்கு மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் வழிமுறைகளுக்கான உதாரணங்களை உலகெங்கிலும் உள்ள பல்வேறு மத்திய வங்கிகளில் அவதானிக்கலாம். பணவீக்கமானது இலக்கின் ஏதேனும் ஒரு பக்கத்தில் 1 சதவீதத்திற்கு மேல் விலகுமாயின் இங்கிலாந்து வங்கியின் நாணயக் கொள்கைக் குழு, ஆளுநரினால் வேந்தருக்கு எழுதவேண்டுமென இங்கிலாந்து வங்கிச் சட்டம் (1998) ஆணையளிக்கின்றது. 2022இல் ரஷ்யா-உக்ரைன் மோதல் மற்றும் உயர்வடைகின்ற வலு விலைகள் காரணமாக ஐக்கிய இராச்சியத்தின் பணவீக்கம் 10 சதவீதத்தை விஞ்சிச்சென்று, ஆளுநர் மூலம் வேந்தருக்கு முக்கிய அறிவிப்புத் தொடரொன்றினை சமர்ப்பிப்பதற்குத் தூண்டியது. அதேபோன்று, நியூசிலாந்து ரிசேர்வ் வங்கிச் சட்டம் 2021, பணவீக்க விலகல்கள் பற்றி விளக்குகின்ற நாணயக் கொள்கைக் குழு பட்டயத்தில் குறிப்பிடப்பட்டவாறு கிரமமான நாணயக்கொள்கை அறிக்கைகளை தேவைப்படுத்துகின்றது. 2022இல் பணவீக்கம் 7 சதவீதத்தை விஞ்சிச் சென்றபோது, பணவீக்க போக்குகள், இலக்கிலிருந்தான விலகல்கள் மற்றும் கொள்கை பதிலிறுப்பு என்பவற்றை விளக்குகின்ற நாணயக் கொள்கை அறிக்கைகளை வெளியிடுமாறு நியூசிலாந்து ரிசேர்வ் வங்கி வேண்டப்பட்டது. பணவீக்கம் தொடர்ச்சியாக மூன்று காலாண்டுகளுக்கு இலக்கிடப்பட்ட வீச்சுகளுக்கு வெளியில் இருக்குமாயின் அரசாங்கத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இந்திய ரிசேர்வ் வங்கிச் சட்டம் 1934 (2016இல் திருத்தப்பட்டது) மத்திய வங்கியை தேவைப்படுத்துகின்றது. உலகளாவிய பணவீக்க உயர்வடைதலுடன் 2022இல் இந்தியாவில் பணவீக்கம் அதன் இலக்கினை விஞ்சிச் சென்றது. இது, இந்திய ரிசேர்வ் வங்கியைக் காரணங்களை விளக்கிச் சீராக்க வழிமுறைகளை எடுத்துரைத்து அரசாங்கத்திற்கு அறிக்கையொன்றை சமாப்பிப்பதற்குத் தூண்டியது. பெடரல் ரிசேர்வ் மீறல்களை நியாயப்படுத்துவதற்கு சட்டரீதியாக வேண்டப்படாமைக்கு மத்தியிலும், அதன் கொள்கை நடவடிக்கைகள் பற்றி காங்கிரஸ்க்கு கிரமமாக அறிக்கையிடுகின்றது. இப்பொறுப்புக்கூறல் வழிமுறைகள் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வது மாத்திரமின்றி பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கிகளின் முயற்சிகளில் நம்பிக்கையினையும் மீளவலுப்படுத்துகின்றது.

## முடிவுக் குறிப்புகள்

விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் நாணயக்கொள்கை உருவாக்கத்தில் பொதுமக்களின் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் நாணயக்கொள்கை உருவாக்கத்தில் பொறுப்புக்கூறல் அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. பணவீக்கத்திற்கு தெளிவான இலக்குகளை நிர்ணயித்தல்,

3

3

விலகல்களை விளக்குதல் மற்றும் திருத்த நடவடிக்கைகளை எடுத்தல் என்பன மூலம் மத்திய வங்கிகள் அவற்றின் நம்பகத்தன்மையினை மேம்படுத்தி விலை உறுதிப்பாட்டினைப் பேணி பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கலாம். வெளிநாட்டு அதிர்வுகளை அல்லது உள்நாட்டு கொள்கைரீதியிலான தவறுகளைக் கையாளுகின்ற போது எதுவாக இருப்பினும் மத்திய வங்கிகள் விலையுறுதிப்பாட்டினை அடைவதனையும் பேணுவதனையும் உறுதிசெய்வதற்கு வெளிப்படையாகவும் பதிலளிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இலங்கையில் நடுத்தர கால பணவீக்க எதிர்பார்க்கைகள் பரந்தளவில் 5 சதவீத இலக்குடன் ஒருங்கிணைந்து காணப்படுவது பொருளாதார முகவர்களுக்கு மத்தியில் நாணயக் கொள்கை உருவாக்கம் மீதான நம்பிக்கையினைப் பிரதிபலிக்கின்றது. மத்திய வங்கிச் சட்டத்தில் ஆணையளிக்கப்பட்ட ஆண்டுக்கு இரு முறை வெளிவரும் நாணயக் கொள்கை அறிக்கைகள் மற்றும் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் போன்ற தொடர்பூட்டல் உபாயங்கள், பொதுமக்கள் நம்பிக்கையினை நிறுவுவதில் அத்தியவசியமானதாகக் காணப்படுகின்றது.

உசாத்துணைகள்

1. Adrian, T. and Khan, A. (2019) 'Central Bank Accountability, Independence, and Transparency', *IMF Blog*, 25 November. Available at: https://meetings.imf.org/en/IMF/Home/Blogs (Accessed 30 March 2025).

2. Bank of Canada. (2008) *Monetary Policy Report Summary - October 2008.*

3. Goodhart, C.A.E. (2010) 'The Changing Role of Central Banks', *BIS Working Paper No. 326*, Bank for International Settlements.

4. Mishkin, F.S. (1997) 'Strategies for Controlling Inflation', In Lowe, P. (ed.), *Monetary Policy and Inflation Targeting, 21-22 July 1997, Kirribilli*. Sydney: Reserve Bank of Australia, pp. 7-38.

5. Reserve Bank of New Zealand. (2011) *Monetary Policy Statement - March 2011.*

6. Rusnok, J. (2018) 'Two Decades of Inflation Targeting in the Czech Republic', *Finance a Uver*, 68(6), pp. 514-517.

கல்வியாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களை ஊடாடும் பின்னூட்டல் இணைப்பில் ஈடுபடுத்தியது. ஆகையினால், இந்த முயற்சி பணவீக்க எதிர்பார்க்கைகள் திறம்பட நங்கூரமிடுவதைத் தடுக்கக்கூடிய தகவல் சமச்சீரற்ற தன்மையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. 2024 நவம்பரில் ஓரிரவுக் கொள்கை வீதங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னதாக இதேபோன்ற ஆர்வலர்களை உள்ளடக்கிய அணுகுமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கமைய, மத்திய வங்கியானது நிதியியல் நிறுவனங்களும் பொதுமக்கள் உள்ளடங்கலாக ஏனைய ஆர்வலர்களும் நிலைமாற்றம் குறித்து நன்கு அறிந்திருப்பதை உறுதி செய்வதற்காக பல்முனை தொடர்பாடல் மூலோபாயமொன்றை நடைமுறைப்படுத்தியது. இம்முயற்சிகள் பங்கேற்கின்ற நிறுவனங்களுடன் நடைமுறைப்படுத்தலுக்கு முந்திய விழிப்புணர்வு அமர்வுகள், மாற்றத்தை விளக்கும் ஒரு விரிவான கருத்துக் குறிப்பை வெளியிடுதல் மற்றும் மாற்றத்தின் பொருத்தத்தை வெவ்வேறு ஆர்வலர் குழுக்களுக்கு பிரிக்கும் மூன்று மொழிகளிலும் செய்தித்தாள் கட்டுரைகள் ஆகியற்றை உள்ளடக்கின. மத்திய வங்கியானது 2024ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளிலும் அதேபோல 2024ஆம் ஆண்டின் மூன்றாம், நான்காம் காலாண்டுகளிலும் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளிலும் பணவீக்க இலக்கை விட 2 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, மத்திய வங்கியானது நிதியமைச்சர் ஊடாக 26(5) ஆம் பிரிவுக்கு இணங்கப் பாராளுமன்றத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தது[5]. அரசாங்கத்துடன் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடல்களும் ஆலோசனைகளும், குறிப்பாக, அதிகரித்த நிறுவனசார் சுயாதீனத்தன்மைக்கு மத்தியில், பொதுமக்களின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கான மத்திய வங்கியின் அர்ப்பணிப்பை வலுப்படுத்தின. மத்திய வங்கி அதன் பரந்த நாணயக் கொள்கை தொடர்பாடல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, 2024இல் ஆண்டிற்கு இருமுறை சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையையும் வெளியிடத் தொடங்கியது. இந்த வெளியீடு திறந்த சந்தை தொழிற்பாடுகள், திரவத்தன்மை முகாமைத்துவம், குறுகிய கால வட்டி வீதங்கள் மற்றும் சட்டரீதியான ஒதுக்குத் தேவைப்பாடுகள் உள்ளிட்ட நாணயத் தொழிற்பாடுகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றது.

**2024இல் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி சந்தையை வலுப்படுத்துவதற்கும் வெளிப்படைத் தன்மையினை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கும் முக்கிய முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தியது.** ஆண்டு காலப்பகுதியில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புக்கு இசைவாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி

5 முதலாவது 'நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையில் (தொடர்புடைய காலப்பகுதி: 2024 ஆம் ஆண்டின் காலாண்டு 2 மற்றும் காலாண்டு 3) குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல்' பற்றிய அறிக்கை இப்போது பொதுமக்களின் அணுகலுக்குக் கிடைப்பனவாகவுள்ளது: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/monetary_policy/report_on_deviation_of_inflation_target_Q2_and_Q3_2024_e.pdf. பிந்திய அறிக்கையும் எதிர்வரும் காலங்களில் கிடைப்பானவாகவிருக்கும்.

வீத கட்டமைப்பை மத்திய வங்கி தொடர்ந்தும் பேணிய அதேவேளை இந்த தலையீடுகள் செலாவணி வீதத்தில் மிதமிஞ்சிய தளம்பலைத் தணிப்பதற்கும் மற்றும் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவு செய்வதினூடாக ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவிருந்தன. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதமானது பொருளாதார அதிர்வுகளுக்கு பதிலிறுப்பும் வகையில் தன்னியக்கமாக சீராக்கப்படுவதன் மூலம் பொருளாதாரத்திற்கு அதிர்ச்சி உறிஞ்சியாக செயற்படுவதுடன் சென்மதி நிலுவைச் சீராக்கங்களினூடாக வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டினைப் பேணுகின்றது. செலாவணி வீதத்தினை முன்னர் தீர்மானிக்கப்பட்ட மட்டத்தில் பேணுவதற்கான தேவையினால் கட்டுப்படுத்தப்படாமல் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அது மத்திய வங்கிக்கு உயர்ந்த சுயாதீனத்தை வழங்குகிறது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை வலுப்படுத்தும் நோக்கில், 2024 இல் மத்திய வங்கியும் உரிமம்பெற்ற வங்கிகளும் வெளிநாட்டுச் செலாவணி உலகளாவிய கோவையை ஏற்றுக்கொண்டமையானது சந்தை ஒருமைப்பாட்டை மேம்படுத்தியதுடன், உலகளாவிய தரங்களுடன் நடைமுறைகளை இணைத்த அதேவேளை 2025 மாச்சில் வெளிநாட்டுச் செலாவணியைப் பொருந்தச் செய்யும் தளமொன்றை நடைமுறைப்படுத்தியமையானது சந்தை ஆழத்தையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்தி, மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையை வலுப்படுத்தியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலை கண்டுபிடிப்பு செயன்முறைக்கு உகந்த கொள்கை மற்றும் தொழிற்பாட்டுக் கட்டமைப்பொன்றானது, செலாவணி வீதம் பெருமளவில் சந்தை அடிப்படைகளைப் பிரதிபலிக்கும் என்பதை உறுதி செய்து, நம்பிக்கையை அதிகரித்து, ஆழமான மற்றும் திரவத்தன்மையுடன் கூடிய சந்தையை பேணி வளர்க்கின்றது.

## 3.3 வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள்

### செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள்

**2024இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளில் படிப்படியான மேம்பாடு மற்றும் வெளிநாட்டுத் துறையின் அவதானிக்கப்பட்ட மிகுந்த உறுதிப்பாடு என்பவற்றிற்கு இசைவாக அரசாங்கமானது மத்திய வங்கியுடனான ஆலோசனையுடன் நோய்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காலப்பகுதிகளில் விதிக்கப்பட்ட நிர்வாக ரீதியான வழிமுறைகளை தொடர்ந்தும் கட்டம் கட்டமாக நீக்கியது.** இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள், செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவக் கட்டுப்பாடுகள் என்பவற்றைப் படிப்படியாக தளர்த்தப்பட்ட வழிமுறைகள் உள்ளடக்குகின்றன. இப்பின்னணியில், நடைமுறை பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கை ரூபாவை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதன் மீதான சில கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு நிதி அமைச்சரும் மத்திய வங்கியும் 2017 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவசியமான ஒழுங்குவிதிகளையும் பணிப்புரைகளையும் விடுத்தனர். இதற்கமைய, பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களின் அல்லது பட்டியலிடப்பட்ட பங்குகளின் வருமானத்தை அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளை (குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட) கொடுப்பனவு செய்வதற்கும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகளையும் இலங்கை அபிவிருத்தி முறிகளையும் கையகப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணி மீதிகள்/காசுப்பாய்ச்சல்கள் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் இலங்கை ரூபாய்களை மாற்றுவதன் வாயிலாக வதியாதோருக்கு கொடுப்பனவு செய்வதற்கு வதிகின்ற கம்பனிகள் அனுமதிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருக்கின்ற வதிகின்ற கம்பனிகளும் ஏற்கனவே காணப்படுகின்ற குறுகிய காலக் கடன்களை வெளிநாட்டுச் செலாவணி மீதிகள்/காசுப்பாய்ச்சல்கள் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் இலங்கை ரூபாய்களை மாற்றுவதன் வாயிலாக வதியாதவர்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டன. மேலும், 2024 செத்தெம்பர் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அனுமதிக்கப்பட்ட கழிவுகளின் பின்னர் ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியவற்றை கட்டாயமாக மாற்றும் தேவைப்பாட்டிற்கான காலப்பகுதி கிடைப்பனவுத் திகதியிலிருந்து மூன்று நாட்காட்டி மாதங்கள் முடிவடைகின்றதனைத் தொடர்ந்து வருகின்ற மாதத்தில் 10ஆம் நாள்வரை நீடிக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணியை சிறந்த காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் செலாவணி நட்டங்களை குறைத்தல் என்பவற்றிற்காக நீடித்த காலப்பகுதிக்கு வைத்திருப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு இடமளித்தது. மேலும், ஏற்றுமதிப் பெறுமதிகளின் ஒன்றிணைத்தல்

3

மற்றும் ஏற்றுமதிப் பெறுகைகளை திருப்பியனுப்புதல் போன்றவற்றின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஏற்றுமதிப் பெறுகைகளின் கண்காணிப்பு முறைமையில் மேம்பாடுகள் காணப்பட்டன.

**சென்மதி நிலுவை நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாட்டுடன் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளாக முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான குறிப்பிட்ட இடைநிறுத்தல்களும் கட்டுப்பாடுகளும் 2024இல் தளர்த்தப்பட்டன.** இதற்கமைய, வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வெளிமுக முதலீட்டுக் கணக்குகளூடாக இலங்கையில் வதிகின்ற ஆட்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளின் தற்காலிக இடைநிறுத்தமும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான தற்காலிக வரையறைகளும் 2024 காலப்பகுதியில் கணிசமாகத் தளர்த்தப்பட்டு, உள்நாட்டு வியாபாரங்களின் உலகளவிலான விரிவுபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. எனினும், இலங்கையில் வதிகின்ற ஆட்கள் மூலம் வைத்திருக்கப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுக பணவனுப்பல்கள் மீது விதிக்கப்பட்ட தற்காலிக வரையறைகள் தொடர்ந்தன. இதற்கு மேலதிகமான, புலம்பெயர் கொடுப்பனவின் கீழ் புலம்பெயர்ந்தவர்கள் மூலமான வெளிமுக நிதி மாற்றல்கள் மீதான வரையறைகள் மேலும் தளர்த்தப்பட்டன. மேலும், இலங்கைக்கு வெளியில் நிதியங்களை அனுப்புவதற்கு வெளிநாட்டு தற்காலிக வதிவிட வீசா வைத்திருக்கும் இலங்கையர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற கொடுப்பனவு 2021 பெப்புருவரியில் வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரையறைக்கு மீளமைக்கப்பட்டது. சென்மதி நிலுவை நிலைமைகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அபிவிருத்திகள் என்பவற்றுக்கு இசைவாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நடப்பு மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளை கட்டம் கட்டமாக தளர்த்துவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

**நாட்டுக்கு அதிக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கு மத்திய வங்கி 2024இல் பல கொள்கை ரீதியான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** இதற்கமைய, கொழும்புப் பங்குபரிவத்தனையின் முயற்சியொன்றாகக் காணப்படுகின்ற அத்தகைய பிணையங்களின் குறுகிய கால விற்பனையை இயலச்செய்யும் நோக்கத்திற்காக “பிணையங்கள் கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்கல் கொடுக்கல்வாங்கல்கள்” இன் கீழ் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட எவையேனும் பிணையங்களை கையகப்படுத்துவதற்கு, வைத்திருப்பதற்கு, உரிமைமாற்றுவதற்கு அல்லது வாக்குறுதியளிப்பதற்கு வதியாதவர்களை இயலச்செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட வீசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வதிவிட வீசாவினைப் பெற்றுக்கொள்கின்ற வெளிநாட்டவர்களின் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. எனினும், வதியாதவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களின் பெறுகைகளைப் பயன்படுத்தி நாட்டுக்கான பன்னாட்டு முறிகளில் முதலிடுவதற்கு வதிகின்ற கம்பனிகளுக்கான அனுமதி ஆண்டு காலப்பகுதியில் நீக்கப்பட்டது.

## இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்

**மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்து, 2024ஆம் ஆண்டிலும் 2025ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் இறக்குமதிகள் மீதான பெரும்பாலான கட்டுப்பாட்டு வழிமுறைகளை அரசாங்கம் தளர்த்தியது.** 2025 அளவில் மோட்டார் வாகனங்களின் இறக்குமதித் தடையை முழுமையாகத் தளர்த்துவதற்கு மத்திய வங்கியின் பரிந்துரைகளுடன் இணங்கி அரசாங்கம் தொடக்க வழிகாட்டலொன்றைத் தயாரித்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதித்திட்டத்தின் கீழ் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதை பரிசீலணையிற்கொண்டு இது இடம்பெற்றது. வாகன இறக்குமதிக் கட்டுப்பாடானது 2024இன் மூன்றாம் காலாண்டில் முதற்கட்டத்தில் பொதுப் பயணிகள் மற்றும் விசேட நோக்கு வாகனங்கள்

அத்துடன் இயந்திரமயமாக்கப்படாத பொருட்கள் இறக்குமதிகளை அனுமதிப்பதுடன் தொடங்கி அதனைத் தொடர்ந்து 2024இன் நான்காம் காலாண்டில் வர்த்தக அல்லது பொருட்கள் போக்குவரத்து வாகனங்களுடனும் 2025இன் முதல் காலாண்டில் தனிப்பட்ட பயன்பாட்டு மோட்டார் வாகனங்களுடனும் என மூன்று கட்டங்களில் செயலுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டது அதற்கமைய, கட்டம் கட்டமான தளர்த்தல் திட்டத்திற்கு அமைச்சரவை 2024 செத்தெம்பரில் அனுமதியளித்தது. கட்டம் 1 தளர்த்தல்கள், 2024 திசெம்பரில் தாமதமாகத் தொடங்கப்பட்ட அதேவேளை, இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள் 2025 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்டன. மோட்டார் வாகனங்களின் இறக்குமதி ஏறத்தாழ 5 ஆண்டுகளாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் மோட்டார் வாகனங்களுக்கான அடங்கியிருந்த மிதமிஞ்சிய கேள்வியினைக் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான வரி மற்றும் வரியல்லா வழிமுறைகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கட்டுபாட்டு வழிமுறைகளுக்கு மத்தியில் 2025இல் மோட்டார் வாகன இறக்குமதிகளின் காரணமாக இறக்குமதிச் செலவினத்தில் கணிசமான அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடையச் செய்யும். எனினும், மோட்டார் வாகன இறக்குமதிகள் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுமென்றும் (முதன்மையாக வர்த்தக வாகனங்களினூடாக) அரசிறையை அதிகரிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றன.

## 3.4 நிதியியல் துறைக் கொள்கை வழிமுறைகள்

### பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள்

**சாத்தியமான முறைமைசார்ந்த இடர்நேர்வுகளை இனங்கண்டு, நிதியியல் உறுதிப்பாட்டை வலுப்படுத்தி அவசியமான பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி அதன் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 63(2)ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய வங்கியானது கொள்கை வகுப்புச் செயன்முறை பற்றி ஆர்வலர் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதில் பேரண்ட முன்மதியுடைய கொள்கையின் இன்றியமையாத வகிபாகத்தை எடுத்துக்காட்டுவதற்கும், ஆண்டுகாலப்பகுதியில் பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கட்டமைப்பை வெளியிட்டது. முக்கிய குறிக்கோள்கள், முறைமைசார்ந்த இடர்நேர்வுக் கண்காணிப்பு, கொள்கைக் கருவிகள் மற்றும் மத்திய வங்கியின் பரந்த கொள்கைகளுடன் பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளை ஒருங்கிணைத்தல் என்பவற்றை இக்கட்டமைப்பு எடுத்துரைக்கின்றது. மேலும், உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் வகைப்படுத்தல்கள், வங்கித்தொழில் முறைமையின் தற்போதைய மாற்றங்களைப் பிரதிபலிப்பதை உறுதிசெய்யும் பொருட்டு உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை குறித்துரைப்பதற்காக ஏற்கனவே காணப்படுகின்ற கட்டமைப்பு மற்றும் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கி தாங்கிருப்புக்களின் அளவமைத்தல் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் திருத்தப்பட்ட பட்டியல் அண்மைய எதிர்காலத்தில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**பொருளாதாரம் மீட்சியடைந்து நிலைநிறுத்தப்பட்ட நிலையில் வங்கித்தொழில் துறையின் திரட்சி இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக, குறிப்பாக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களை உள்ளடக்குகின்ற பாரிய வெளிப்படுத்துகைகளின் மீது கடுமையான வரம்புகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.** இந்நடவடிக்கை, பாசல் தேவைப்பாடுகளுக்கேற்ப கடுமையான முன்மதிமிக்க வரம்புகளை இணைத்துக் கொள்வதுடன் சாத்தியமான கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும், பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மையைப் பேணுவதற்கும் மற்றும் வங்கித்தொழில் துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், கட்டுப்பாட்டுடனானத் தொடர்பு மற்றும் பொருளாதாரத் தங்கியிருக்கும் தன்மை என்பவற்றை உள்ளடக்கிய கடன்பெறுநர்களுக்கிடையிலான ஒன்றுடனொன்று கொண்டிருக்கும் இணைப்பினை நிர்ணயிக்கும் பிரமாணத்தை வலுப்படுத்துகின்றது. இம்முன்னெடுப்பிற்கு இசைந்து செல்லும் விதத்தில், உரிமம்பெற்ற வங்கிகளின் பாரியளவான வெளிப்படுத்துகைகளை

3

அவற்றின் அடுக்கு I மூலதனத்தின் 25 சதவீதத்திற்கு மட்டுப்படுத்துகின்றவாறு, 2026 சனவரி 01ஆம் திகதி நடைமுறைக்குவரும் வகையில், 2024 மாச்சில் பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளது. தனிக் கம்பனிகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், நபர்களின் சங்கங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளிட்ட கடன்பெறுநர்களுக்கு, தனிப்பட்ட அடிப்படையிலும், தொடர்புபட்ட கடன்பெறுநர் குழுக்கள் என்கின்ற மொத்த அடிப்படையிலும், 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரையின் கீழ் இவ்வுச்ச எல்லை பொருந்தும். இந்த ஒழுங்குமுறை 2026 சனவரி 01 முதல் தனித்தனி அடிப்படையிலும், 2030 சனவரி 01 முதல் ஒட்டுமொத்த அடிப்படையிலும் நடைமுறைக்குவரும். நிலவும் பேரண்ட நிதியியல் நிலைமைகளையும், பொருளாதார மீட்சிக்குத் தொடர்ந்தும் தேவைப்படும் ஆதரவைக் கருத்தில் கொண்டும், இவ்வெளிப்படுத்துகை வரம்புகள் மூன்றாண்டு காலப்பகுதியில் படிப்படியாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு, முழுமையான செயல்படுத்தல் 2028ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யப்படும். உரிமம் பெற்ற வங்கிகள், பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கான வெளிப்படுத்துகைகளை படிப்படியாக குறைத்து, 2030ஆம் ஆண்டுக்குள் அனைத்து பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த வெளிப்படுத்துகைகளை, வெளிப்படுத்துகைகளுக்கான உச்சவரம்பெல்லைக்குள் அடையச் செய்ய வேண்டும். நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணுவதோடு பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், மாற்றத்தை சுமூகமாக ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த கவனமிக்க அணுகுமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது. பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள் பற்றிய விரிவான தகவல்களை நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு 2024இல் பெற்றுக்கொள்ளலாம்.[6]

## உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

**2024 காலப்பகுதியில், வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணுவதற்காக ஒழுங்குவிதிகளை வழங்குதல் அத்துடன் மேற்பார்வை அணுகுமுறையினை வலுப்படுத்தல் உள்ளடங்கலாக முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கி தொடர்ந்தும் அறிமுகப்படுத்தியது.** உரிமம்பெற்ற வங்கிகளை ஆளுகின்ற சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் இயற்றப்பட்டமை முக்கிய மைல்கல்லொன்றைக் குறிக்கின்றது. அதன் நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவளிக்கும் முகமாக ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பல புதிய ஒழுங்குவிதிகளை/வழிகாட்டல்களை வழங்கியது. அதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகளின் நியதித் திரவத்தன்மை விகிதங்களாக திரவத்தன்மை காப்பு விகிதத்தையும், தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதத்தையும் நிர்ணயித்து, வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்ட அதேவேளை நியதித் திரவத்தன்மைச் சொத்து விகிதத்தினைப் பேணுவது இடைநிறுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்களுக்கான வெளிநாட்டு நாணயங்களை குறித்துரைக்கின்ற கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் மீதான கட்டளை என்பன உள்ளடங்கலாக 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டத்தின் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்தவதற்கு ஏனைய பல ஒழுங்குவிதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், தலைமை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளைச் செயலாற்றுகின்ற அலுவலர்கள் என்போரின் பொருத்தப்பாடு மற்றும் தகுதி பற்றிய மதிப்பீடு மீது பணிப்புரைகளும் நிர்ணயங்களும் வழங்கப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் அத்தகைய தரப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள் தொடர்பிலான வரையறைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பிணைகள் என்பவற்றைக் குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளும் வழங்கப்பட்டன.

**உரிமம்பெற்ற வங்கிகளின் கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்பானது தற்போதைய சந்தை அபிவிருத்திகள், பன்னாட்டு சிறந்த நடத்தைகள் மற்றும் பரிணமிக்கின்ற ஒழுங்குமுறைப்படுத்தல்**

6 https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/fssr/fsr_2024e.pdf

**தேவைப்பாடுகள் என்பவற்றுடன் அணிசேரும் விதத்தில் மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.** கூட்டாண்மை ஆளுகைச் செயன்முறைகளையும் நடைமுறைகளையும் மேலும் வலுப்படுத்துவதற்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டதுடன் இப்பணிப்புரைகள் பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பு மற்றும் சுயாதீனம் என்பவற்றை மேம்படுத்துதல், பணிப்பாளர், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி என்போரின் தகைமை மற்றும் தொழில்சார் நேர்மை என்பவற்றை வலியுறுத்தல், சபைத் துணைக் குழுக்களின் செயல்திறன்வாய்ந்த தொழிற்பாட்டினை உறுதிசெய்தல் என்பனவற்றின் மீது பிரதானமாகக் கவனம் செலுத்தும், அதேவேளை தொடர்புடைய தரப்புக் கொடுக்கல்வாங்கல்களின் மேற்பார்வை உள்ளடங்கலாக இடர்நேர்வு மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை மையப்படுத்தியிருந்தன.

**அதிகரித்திருக்கும் பெறுமதியிழந்த சொத்துக்களை முன்மதிமிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தலின் நோக்கிலும் கொடுகடன் இடர்நேர்வைக் கட்டுப்படுத்தி அசாதாரண பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகள் மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபேறான பொருளாதார புத்துயிரளித்தலை வசதிப்படுத்துவதற்காகவும் "உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளை தாபித்தலுக்கான வழிகாட்டல்கள்" மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.** மேலும், வரையறுக்கப்பட்ட தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தின் மூலம் உத்தரவாதமளிக்கப்படும் கடன் அளவுகளுக்கு சலுகை இடர்நேர்வு நிறையேற்றத்தை வழங்கியும் நிதியியல் நிறுவனங்களின் குறிகாட்டிப் பட்டியலில் வரையறுக்கப்பட்ட தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தை உட்சேர்த்தும், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் திருத்தம் செய்யப்பட்டன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, அண்மைய அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகள் என்பன மூலம் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிவாரண வழிமுறைகளை எடுத்துரைப்பதன் மூலம் பொருளாதாரத் துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் முயற்சிகளை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் முன்னெடுத்து, அதற்கேற்றவாறு பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள் மீது சுற்றறிக்கையொன்றினை வழங்கியது.

**மேலும், வங்கித்தொழில் முறைமையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பல வகையான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.** இக்கொள்கை சார்ந்த வழிமுறைகள், உரிமம்பெற்ற வங்கிகளின் காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுகளுக்கான வெளியீட்டு வடிவங்களைக் குறித்துரைத்தல், தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையின் குறைந்தபட்ச எண்ணிக்கை மீது வங்கித்தொழில் சட்ட நிர்ணயத்தை விடுத்தல் அத்துடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மூலம் நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகளைத் தாபிப்பதற்கான வழிகாட்டல்களை விடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

## நிதிக் கம்பனிகள் தொடர்பான கொள்கைகள்

**நிதிக் கம்பனிகளினுள் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதை எய்தும்பொருட்டு மத்திய வங்கி கொடுகடன் இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தைத் கையாளுகின்ற இரு பணிப்புரைகளை வழங்கியது.** இக்கட்டமைப்புகளானவை இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்களை வகுத்தல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், ஆளுகைக் கட்டமைப்புக்கள் மற்றும் துறைக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்கான முறைமைகள் என்பவை உள்ளடங்கலான முக்கிய அம்சங்களை உள்ளடக்கியிருந்தன. மேலும், தரவுகளின் தரத்தினை நிலைநிறுத்துவதற்கு "காலாந்திர அறிக்கையிடல் தேவைப்பாடுகள்" மீதான பணிப்புரையொன்றினை வழங்குவதன் ஊடாக உரியகால, செம்மையான, ஒத்திசைவான மற்றும் முழுமையான தகவல் அறிக்கையிடலை உறுதிசெய்வதற்கு நிதிக் கம்பனிகளுக்கு ஆணையிடப்பட்டது.

**நிதியியல் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கும் நியாயமான சந்தை நடத்தைகளை உறுதிசெய்வதற்கும் நிதிக் கம்பனிகளுக்குள் வைப்புக்களை பரிந்துகேட்கும் நடத்தைகளையும் ஊதியக் கொள்கைகளையும் வலுப்படுத்துவதற்கு முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** "நிதிக் கம்பனிகளால் வைப்புக்களை பரிந்துகேட்டல்" மீதான பணிப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல், விளம்பரங்களை வெளியிடுதல் மற்றும் வைப்புக்களை பரிந்து கேட்பதற்கான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குதல் என்பவற்றுக்கான நிபந்தனைகளை தனித்துவமாகத் தீர்ப்பதன் மூலம் நிதிக் கம்பனிகளுக்கிடையில் நியாயமான போட்டியினை ஊக்குவிப்பதனூடக வைப்பாளர்களை பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், "ஊதியக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்" மீதான வழிகாட்டலினூடாக நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கும் மூத்த முகாமைத்துவத்தினருக்கும் ஊதிய வழங்கலின் ஒத்திசைவு, நியாயமான தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்வதற்கு ஆண்டுகாலப்பகுதியில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**கட்டம் I வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டதுடன் கட்டம் II அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மற்றும் இணங்காமை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு கரிசனைகள் என்பவற்றைத் தீர்ப்பதற்கான அமுலாக்கல் நடவடிக்கைகளுடன் ஒன்றுசேர்த்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒன்றிணைத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையானது, முன்னேற்றம் கண்டது.** 2020ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தில் கட்டம் I அதில் குறிப்பிடப்பட்ட விரும்பப்பட்ட பெறுபேறுகளை நிறைவுசெய்து முடிவுறுத்தப்பட்டதுடன், கட்டம் II இற்கான திருத்தப்பட்ட கட்டமைப்பு மூன்றாண்டு நிறைவேற்றல் காலப்பகுதியுடன் 2024 திசெம்பரில் நிதிக் கம்பனிகளுக்கென அறிமுகப்படுத்தப்பட்டது. உடனடி சீராக்க நடவடிக்கைக் கட்டமைப்பு மற்றும் வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றிற்கிசைவாக மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிதிக் கம்பனிகள் மீது ஆண்டுகாலப்பகுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. முன்மதிமிக்க பணிப்புரைகளுடன் இணங்கியொழுகியதன் பின்னர் குறிப்பிட்ட நிதிக் கம்பனிகளுக்கு வைப்புக்கள் மற்றும் கடன் வசதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மேலும், முறிவடைந்த நிதிக் கம்பனிகளுக்கான தீர்மான நடவடிக்கைகள், ஒடுக்கிவிடும் செயன்முறைகளைத் துரிதப்படுத்துவதற்கு அத்தகைய கம்பனிகளின் ஒடுக்கிவிடுபவர்களுடன் இடம்பெற்ற பல கலந்துரையாடல்களுடன் முன்னெடுக்கப்பட்டன.

## பொதுப் படுகடன் முகாமைத்துவக் கொள்கைகள்

**2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலானது நாட்டின் பொதுப் படுகடன் முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்க மாறுதலைக் குறிக்கின்றது.** பொது தனிசு முகாமைத்துவச் சட்டம் வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக நிதி அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டவாறு, 2024 யூன் 18 அன்று சட்டமாக்கப்பட்டதுடன் 2024 நவெம்பர் 25 அன்று நடைமுறைக்கு வந்தது. பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது நிதி அமைச்சின் கீழ் 2024 திசெம்பர் 02 அன்று தாபிக்கப்பட்டது. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 132ஆம் பிரிவிற்கமைய, பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மை அல்லது அலுவலகம் தொடர்பிலான இயைபுடைய சட்டம் தொழிற்பாட்டிற்கு வருகின்றவாறான அத்தகைய திகதி வரை அரசாங்கத்தின் சார்பில் அரசாங்கத்தின் பிணையங்களை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் வழங்கி பொதுப் படுகடனை முகாமைசெய்தல் வேண்டும். பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 37ஆம் பிரிவிற்கமைய 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 132ஆம் பிரிவின் ஏற்புடைமை, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் முழுமையாக செயற்பாட்டிற்கு வருவதற்கு 18 மாதங்களைக் கொண்ட விடுவிப்புக் காலத்தினை வழங்கி நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 18 மாதங்களைக் கொண்ட காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின்

மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும். ஆகையினால், இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களம் பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் நியமனத் திகதியிலிருந்து அதாவது 2024 நவெம்பர் 25 இலிருந்து உயர்ந்தபட்சம் 18 மாதங்கள் வரை தொடர்புடைய சட்டவாக்கத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வேண்டப்பட்டுள்ளது.

## நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கொள்கைகள்

**இலங்கையில் முன்னேற்றமடைந்துவரும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து மிகவும் சமத்துவமான நிலைபேறான நிதியியல் சூழல் அமைப்பொன்றுக்கான முன்னுரிமையுடன் அணிசேர்ந்து மத்திய வங்கியின் முக்கிய கொள்கை முன்னுரிமையொன்றாகத் தோற்றம் பெற்றுள்ளது.** 2021இல் தொடங்கப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டம் ஆர்வலர்களின் கூட்டுமுயற்சிகளூடாக தொடர்ந்தும் வெற்றிகரமாக இயங்குகின்றது. இலங்கைக்கான நிதியியல் அறிவு வழிகாட்டலானது நிதியியல் ரீதியாக அறிவார்ந்த மற்றும் இயலுமைமிக்க சமூகத்தினை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு 2024 மேயில் தொடங்கப்பட்டது.

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான மத்திய வங்கியால் நிதியளிக்கப்பட்ட கடன் திட்டங்களின் நிறுத்தம் 2023இல் தாபிக்கப்பட்ட கொள்கையினைத் தொடரும் வகையில் 2024ஆம் ஆண்டு முழுவதும் செயற்பாட்டிலிருந்தது.** மத்திய வங்கியின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழிற்முயற்சியாளர்களுக்கான கடன்வழங்கல் நடவடிக்கைகளிலிருந்து படிப்படியாக விலகும் உபாய ரீதியான நோக்குடன் அரசாங்கம் மற்றும் கொடை முகவராண்மைகள் மூலம் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களை இடைநிறுத்துவதற்கான ஆளுகைச் சபையின் தீர்மானத்துடன் இது அணிசேர்ந்துள்ளது. எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் தலைமையுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்கள் கொள்கைவகுப்புச் செயன்முறைகளில் செயலூக்கமிக்க வகிபாகத்தை மத்திய வங்கி பேணுகின்றது.

## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவிற்கு தொடர்புடைய கொள்கைகள்

**மத்திய வங்கியானது எண்ணியல் (டிஜிட்டல்) கொடுப்பனவுகளை ஊக்குவிக்கின்ற அதேவேளை கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பினையும் உறுதிப்பாட்டையும் பேணிக்காப்பதனை நோக்காகக் கொண்டு ஆண்டு காலப்பகுதியில் பல்வேறுபட்ட கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** தற்போது நடைமுறையிலுள்ள முயற்சிகளின் ஒரு பகுதியாக உள்நாட்டு உயர்மதிப்பு பணப்பரிவர்த்தனைகளுக்காக பன்னாட்டு சிறந்த நடைமுறைக்கு இணங்கியொழுகும் விதத்தில் சர்வதேச நியமங்கள் குழுவின் 20022 செய்தி நியமம் மத்திய வங்கியினால் செயற்படுத்தப்பட்டது. மேலும், எண்ணியல் சில்லறைக் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதற்கு லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களுக்காக பரிவர்த்தனைத் தொகையின் 1 சதவீதத்திற்கு உயர்ந்தபட்ச வணிகர் கழிவு வீதம் நிறுவப்பட்டதுடன் பரிவர்த்தனை ஒன்றிற்கான உயர்ந்தபட்ச வரையறை ரூ.200,000 இலிருந்து ரூ.500,000 ஆக அதிகரிக்கப்பட்டது.

**அரச நிறுவனங்களுக்கான நிகழ்நிலை (Online) கொடுப்பனவுகளை செயற்படுத்த மற்றும் பொதுமக்களுக்கு வினைத்திறனையும், பெறுவழியினையும் மேம்படுத்தும் நோக்கில், மத்திய வங்கி, உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்தையும் கவ்பே (GovPay) வசதியினை அவற்றின் இணையவழி வங்கித்தளங்கள் மற்றும் செல்லிடத்தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளினூடாக வழங்குமாறு பணிப்புரையை விடுத்து கவ்பே செயற்படுத்தப்படுவதற்கு வசதியளித்தது.** தனிப்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்பில்லாத அரச நிறுவனங்களின், குறிப்பாக உள்ளூராட்சி மன்ற மட்டங்களில் பொதுமக்களிடமிருந்து உடனடி எண்ணியல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் வசதியை கவ்பே வழங்குகின்றது.

3

**மத்திய வங்கி, எண்ணியல் கொடுப்பனவுகளின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், எண்ணியல் கொடுக்கல்வாங்கல்களின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் எண்ணியல் கொடுப்பனவு முறைகளில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கவும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது.** ஜஸ்ட்பே செயற்படுத்தப்பட்டுள்ள அனைத்து செல்லிடத்தொலைபேசிச் செயலிகளையும் ரூ.10,000 அல்லது அதற்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு ஒரு நேரக் கடவுச்சொல்லை (OTP) கோருவதன் மூலம் கட்டண அங்கீகரிப்பு வலுப்படுத்தப்பட்டது. செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவுச் செயலிகளில் இணைக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களின் நடைமுறை/ சேமிப்புக் கணக்குகளை அனுமதியற்ற பிரவேசங்களிலிருந்து பாதுகாப்பதற்காக மத்திய வங்கி செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு செயலி வழங்குநர்களை வாடிக்கையாளர் பதிவேற்றத்தின் போது தகவலை சரிபார்த்து அடையாளத்தை சரிபார்க்குமாறு பணித்தது. மேலே குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக பணம் அல்லது மதிப்புடைய பரிமாற்ற சேவை வழங்குநர்களின் செயற்பாடுகளை சட்டபூர்வமாக்குவதற்கும் மற்றும் அதிகாரபூர்வ வழிகளில் பணப்பரிமாற்ற வணிகத்தில் ஈடுபடுவதற்கு வாய்ப்பினை வழங்குவதற்காகவும் அவர்களைப் பதிவுசெய்யும் விதமாக 2024இல் 01ஆம் இலக்கமிடப்பட்ட பணம் அல்லது மதிப்புடைய பரிமாற்ற சேவை வழங்குநர்கள் நெறிமுறைகள் வழங்கப்பட்டது.

## பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

**இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டை இற்றைப்படுத்த தொடங்கியுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கை இற்றைப்படுத்தப்படும்.** 2025 நடுப்பகுதியில் நிறைவுசெய்யப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள வரி மற்றும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் மீதான புதிய பாடத்தொகுதி இவ்விற்றைப்படுத்தலில் உள்ளடங்கியுள்ளது. முன்னைய 2021/22 தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகள் 2023 – 2028 இற்கான இலங்கையின் தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கையை கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றியது. இக்கொள்கைகளின், செயல்திறன்வாய்ந்த நடைமுறைப்படுத்தலை இலக்காகக் கொண்டு நிதியியல் உளவறிதல் பிரிவு, 24 தொடர்புடைய நிறுவனங்களுக்காக/ அதிகாரிகளுக்காக பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்கி உலகளாவிய பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தரநியமங்களுடன் இலங்கையின் இணங்குவித்தலை மீள்வலிமைப்படுத்தியது. நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கான ஆண்டுகாலப்பகுதியில் 39 பங்குதாரர் கூட்டங்களை நடாத்தி பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான தேசிய கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்க்கைகள் என்பவற்றுடன் அணி சேர்வதை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான செயலணி உறுதிப்படுத்தியது. மேலும், 2026 மாச்சில் தொடங்கவுள்ள பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தின் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டிற்கான தயார்படுத்தலில், மத்திய வங்கியானது முன்மதியுடைய மேற்பார்வையாளர் என்ற ரீதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை தொடர்ந்தும் வலிமைப்படுத்தி நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் இணங்குவித்தல் மேற்பார்வையினையும் அதிகரித்தது.

**2024இல், நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையின் பாகமாக 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்துடனான இணங்குவித்தலை மேம்படுத்துவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கும் காப்புறுதிக் கம்பனிகளுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனக் கடப்பாடுகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் அத்துடன் அரும் உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர்களுக்கான இணங்குவித்தல் தேவைப்பாடுகள் போன்றவற்றை முக்கிய சுற்றறிக்கைகளாக வழங்கியது.**

இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகளை வலுப்படுத்துவதற்கான பரந்த உபாயத்தின் ஒரு பாகத்தினை இவ்வழிமுறைகள் கொண்டமைந்து நிதியியல் துறையின் நேர்மையினை மீள வலிமைப்படுத்தி பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான சிறந்த நடத்தைகளை கடைப்பிடிப்பதை உறுதிசெய்கின்றன. நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணுதல் இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேம்படுத்தல் சட்டத்திற்குப் புறம்பான நிதி பாய்ச்சல்களிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்காக மத்திய வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை இம்முயற்சிகள் கூட்டாகப் பிரதிபலிக்கின்றன.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான கொள்கைகள்

**நாட்டின் நிதியியல் துறையினுள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு மத்திய வங்கி 2024இல் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.** 2024 ஓகத்து 09இல் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டமை இம்முயற்சியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது. இவ்வொழுங்குவிதிகள், வாடிக்கையாளர்கள் சமத்துவமாக நடத்தப்படுகின்றனர் மற்றும் தெளிவான, செம்மையான தகவல்களுக்கு பெறுவழியினைக் கொண்டுள்ளனர் என்பதனை உறுதிசெய்து, நிதியியல் சேவைகளின் நியாயத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை ஊக்குவிப்பதற்கான முக்கிய கட்டமைப்பாக பணியாற்றுகின்றது.

**இந்த ஒழுங்குவிதிகளின் முக்கிய அம்சமொன்றாக, சந்தை நடத்தை மேற்பார்வையினை மேற்கொள்ள மத்திய வங்கிக்கு முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.** இம்முயற்சி வாடிக்கையாளர் உரிமைகளைப் பாதுகாப்பதில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை நிதியியல் நிறுவனங்கள் கடைப்பிடிப்பதனையும் அவற்றின் செயற்றிறன்வாய்ந்த தன்மையையும் மத்திய வங்கி ஊக்கத்துடன் கண்காணிப்பதனை இயலச்செய்கின்றது. முறைசார் மதிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தும் அமைப்பு நடைமுறைப்படுத்தலிலுள்ள சாத்தியமான இடைவெளிகள் அல்லது சவால்களைக் கண்டறிந்து சந்தை நடத்தை குறித்த எதிர்கால விதிமுறைகளை செம்மைப்படுத்தவும் மேம்படுத்தவும் இவ்வறிவினைப் பயன்படுத்தலாம்.

## வைப்புக் காப்புறுதி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானம் பற்றிய கொள்கைகள்

**2024இல் மத்திய வங்கி, 2023 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தீர்மானக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் முக்கிய முன்னேற்றங்களை மேற்கொண்டது.** 2023 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைவாக தீர்மானக் கொள்கை உருவாக்கப்பட்டு செயல்திறன்வாய்ந்த தீர்மான உபாயங்களுக்கான ஆரம்பப் பணிகளைத் தொடங்கியது. உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தீர்மானத் தூண்டல்கள், முன்கூட்டிய தலையீட்டினை இயலச்செய்வதற்கும் நிதியியல் இடர்பாட்டினை செயலூக்கத்துடன் முகாமைசெய்வதற்குமாக வெற்றிகரமாகத் தாபிக்கப்பட்டது. தீர்மானத் திட்டமிடல் நோக்கங்களை ஆதரிப்பதற்காக மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளிடமிருந்து முதன்மைத் தரவுகளை சேகரிப்பதற்கான பணிப்புரைகளையும் வழங்கியது. மேலும், இடர்பாடு நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் கிரமமான செயன்முறையினை உறுதிசெய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளுக்காக தீர்மானத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், வைப்புக் காப்புறுதித் தொழிற்பாட்டினை வலுப்படுத்துவதற்கு இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கு 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டப் பணிப்புரையை மத்திய வங்கி வழங்கியது.

**நிதியியல் துறை பாதுகாப்பு வலையை வலுப்படுத்தும் கருத்திட்டத்தின் பாகமாகவும் பன்னாட்டு சிறந்த நடத்தைகளுக்கிசைவாகவும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களுக்கு மீளளித்தல் மீதான புதிய**

3

**வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு மிகுந்த நலன்களை வழங்குவதற்காக கோரிக்கைகளைக் கோவைப்படுத்தி நடைமுறைகளை செயன்முறைப்படுத்துவதை சீரமைத்து துரிதப்படுத்துவதை இவ்வழிகாட்டல்கள் நோக்காகக் கொண்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, மட்டுப்பாடுகளை மேலும் சீரமைத்து செயல்திறன்வாய்ந்த விதத்தில் தீர்ப்பதற்கு மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் மூலம் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கத்தை கட்டாயமாகப் பதிவுசெய்தல் மீது 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கியது. இப்பணிப்புரை இழப்பீட்டுக் கொடுப்பனவுச் செயன்முறையின் வினைத்திறனையும் செயல்திறன்வாய்ந்த தன்மையினையும் அதிகரிக்கின்ற அதேவேளை, வைப்பாளர்களை அடையாளப்படுத்தும் செயன்முறையை எளிமைப்படுத்துவதையும் நோக்காகக் கொள்கின்றது.